V1 No. 19 10 May 1928

N28.1.19
189002

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஞ மேமீ 10உ [No 19.

OF THE REGISTRAR OF BOOKS
No.
20 NOV 1928
MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	361	5.	வானசாஸ்திரம்	371
2.	காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L.	363	6.	இலக்கிய எற்ற ஆராய்ச்சி E. T. சொக்கம்மாள் B. A. L. T.	372
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L.	366	7.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L.	374
4.	தமிழ்ப் பாடம்	368	8.	மதிப்புரை (பண்டைக்கால யாழ்ப்பாணம்)	377
			9.	வர்த்தமானம்	378

கலா நிலயம்.

கோவையிற் குறையில்லை.

சில தினங்களுக்குமுன், தமிழகராதிச் சங்கத்தின் தலைமைப் பதிப்பாசிரியராய திருவாளர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் செய்தவோர் உபந்நியாசத்தில், திருவாசகம் பாடிய மணிவாசகப் பெருமானால் திருச்சிற்றம்பலக் கோவை இயற்றப்பட்டதெனும் சொல் தன்னாலேற்றுக் கொள்ளத்தக்க தொன்றன்றென மறுத்துப் பேசியதாகக் கேள்வியுற்றோம். இலக்கியத் துறையில் யாமறிந்த வரையில் இவர் கூறும் இம்மதம் புதியது. புதியதென்ற பான்மையால் அதைப் புறக்கணித்தல் நூலாராயும் அறிவுடையோர்க்கழகன்று. எனினும், இவர் பலநாள் முயன்று செய்த ஆராய்ச்சியின் பயனாய இக்கொள்கையை எடுத்துப் பேசிய காலத்து, அவ்வவைக்கண் அமர்ந்தோரிற் சிலர், அப்போதவர் சபைக்குத் தலைவராயமைந்துளார் என்பதையும் மதியாது, அவருரையின்பால் தமக்குற்ற வெறுப்பை வெளிப்படையாகக் காட்டிச் சொல்லிற்குச் சொல் தடுத்தறைந்து கடிந்தனராம். இன்னவாறு தமிழாராயு மொரு இடத்திலே நிகழ்ந்ததெனக் கேட்க யாம் பெரிதும் வருந்துகின்றோம். பொதுஜன இயக்கங்களென்னும் பேரோடு போராடும் கூட்டங்களிற்றானே, உரைப்பாருரைக்கு அல்லலே பிணக்கிக் குழுமியோர் குமுறி மறுத்துக் குழப்பஞ்செய்தல், பொருத்த மன்றெனினும், வழக்கமாயிற்று. வயிற்றிலே வாய்வைத்துப் பேசுகின்ற அரசியற் கட்சி வாதப் பிரசங்கங்களில் நிகழ்கின்ற இச்செய்தி, மனதிலே நன்னுணர்விலே ஆன்மவிளக்கத்திலே பழுத்தொழுகு பொருள்களை அளித்துண்டு மகிழவேண்டிய கல்விக்கழகங்களினும் புகுந்திட நேரிட்டால் அதன்பரிசு என்னும். கல்வி ஆராய்ச்சியிலேனும் சமயப் பற்றிலேனும் ஆசார வகைகளிலேனும் பிறர்மதம் பொறுக்கலாற்றாதவர் தம் மதத்தையும் கற்றிலர் பற்றிலர் என்பதற்குத் தாமே தமக்குப் பழிகூறும் கரியாய் நிற்கின்றனர். அல்லாது, ஒருவர் முயன்றுழைத்து முடிவிற்குவந்த ஒரு கொள்கையை உரைத்தமாத்திரத்திலேயே அதனியலில் தம்மனத்தை இதுகாறும் செலுத்தியிராதவர், அக்கொள்கையை மறுத்தறையு முரிமையு மாற்றலு மெங்கிருந்து பெற்றனர் !

திருவாளர் வையாபுரிப்பிள்ளை ஆழ்ந்த கல்வியும் அக்கல்விக்கியன்ற அறிவுமுடையவர். மாணிக்கவாசகர் திருச்சிற்றம்பலக் கோவையை இயற்றினாரல்லர், என்று அவர் இதுகாறும் யாவரும் எண்ணியிருப்பதற்கு எதிராக எளிதில் கூறிவிடார். தக்க சான்றுகள் அவர் தேடிவைத்திருப்பர் என்பதற்கு ஐயமில்லை. அவைகள் யாவையும் அவர் கூறியபின் அக்கட்டுரையில் தர்க்கமேற்காத தவறேதேனு முளதாயின் அதை மறுக்கவல்ல அறிஞர்க்கு அப்பொழுதே சமயம் வாய்க்கின்றதாகும். அதுவரையில் அவர் கொணர்ந்த கொள்கையை விளக்கென ஏந்தி அவரவர் தாம் கற்றுள நூல்களுள் மீண்டும் புகுந்து மெய் யெதுவெனத் தேட நினைப்பதே தக்கோர் முறை.

ஆராய்ச்சி செய்வதெனின் முறை இதுவென்று காட்டினேமே யல்லாது அவ்வித ஆராய்ச்சியை மேற்கொள்வது எவர்க்கும் கடனென்று யாமிங்கு இயம்பவில்லை. ஒரு நூலின் சிறப்பும் பயனும் அதனகத்தே அமைந்த கல்வியானும் அறிவானும் விளங்கி பெழுகின்றன. ஆக்கியோனறன் ஆன்மாவும் நூலுள் கலந்து திகழ்கின்றதென்பது உண்மையே யாயினும், அவன் பேரால் பெறுவது ஒன்றுமில்லையே. இலக்கியங்களைப் படிக்கின்ற காலத்தில் ஆசிரியனின் ஆன்மவுணர்ச்சி நமது வாழ்க்கையூடுற்றுறைந்து, வாக்கினுல் மனத்தினுல் யாக்கையால் நாம் நிகழ்த்தும் தொழில்கள் யாவும் தூய்மையாய்த் தழைக்குமாறு புரியுமாயின், அந்நூலினுல் பெறுதற்கொத்த பயன் யாவும் பெற்றவராவோம். மற்று, அதன் காலமும் தேசமும் வரலாறும், ஆக்கியோன் ஊரும் பேரும் அவனை ஆதரித்தவனைப் பற்றிய யாவும் ஐயந்திரிபற யாமறிந்திருக்க வேண்டுமென்பது இன்றியமையாதன வல்ல. கவியின் வரலாற்றாராய்ச்சி பொருசிறிது அவன் கருத்தை விளக்குதற் குதவுமென்பதுமுண்மையே. எனினும் காலமும் இடமும் பேரும் கண்டுபிடிக்கும் நோக்கமே முதன்மையாய் இலக்கிய நூல்களைக் கையாளும் வழக்கத்தைப் பாராட்டுதல் கனியிருக்கக் காய் கவர்ந்தற்று. ஒதிய நூல்களாற் காணும் பயனிதுவே யெனப் பலர் கொண்டாடுகின்றனர். கல்லிலும் சுவரிலும் கிடங்கிலும் சொல்லிலும் எழுத்திலும் நடுநிலை வழுவிய தத்தம் மனத்திலும், அகச்சான்றும் புறச்சான்றும் பொறுக்குதலின், பேரும் ஊரும் பாடையின் போக்குங்கிடக்க, நூலின் நயமும் பொருளும் நன்னலமும் நம் மனதைக் கவர்ந்து கொள்ளுமாறு விட்டுவிடலொன்றே மேதக்கது. மறைகளாலும் நாம் அறிந்து கோள்ள முடியாத இறைவன், உளங்கனிந்து நாம் சென்று அவனை யெய்துதற்கு இடந்தருகின்ற பெற்றியினைப் பெரியோருணர்ந்துளர்.

இன்னவாறு, மனத்தூய்மை விளக்கின்ற தன்மையில் நோக்குங்கால் திருச்சிற்றம்பலக் கோவையைப்பற்றித் திருவாளர் வையாபுரிப்பிள்ளை கூறியதாக எம் செவிக் கெட்டிய வோர் உரை வியப்பைத் தருகின்றது. பேரின்ப வெள்ளம்பெருகத் திருவாசகம் பாடிய வாய்கொண்டு திருவாதவூரடிகள் சிற்றின்பத் துறையிற் செறிந்த இச்சிற்றம்பலக் கோவையைப் பாடினரென்பது அமையாதென்று பிள்ளை அவர்கள் சாற்றினராம். இடக்கரை யடக்காது இழிவாய காமத்தை எடுத்தாளும் இக்கோவை தமிழிற்கே தாங்கவொண்ணுப் பழியாய் நம்மனோர் மானத்தை அழித்து நிற்கின்றதென்று அவர் கூறிய கூற்றிலே எமக்கு வாய்மை புலப்படவில்லை. கலைகளை நுகரும் நுண்ணுணர்விலே அழகின் அநுபவத்திற்கன்றிப் பிறிதொன்றற் கிடனிலது. ஆரணங்காணென்று இக் கோவையைக் காட்டியோர் அறியாது செப்பினரல்லர். காமம் என்ற சொல்லளவிலேயே அது கடிதற்கே அமைந்த தொன்றென்று கருதல் பிழை. யாவற்றிலும் மெய்யும் போலியும் என இருவகை இருத்தல் போலவே காமத்திலும் காணலாம். உடலளவு பயில்வதே இன்பமென நடிக்கும் கயவரை அப்பொய்யினின்றும் விடுவித்து மனதொடு மனம் புணர்ந்து இருவரும் ஒருவர் மற்றவருள் தம்மைத் துறந்து கொள்ளும் மெய்க்காதல் தத்துவத்திலே கொண்டு போய்ச் சேர்க்கும் செவ்வியன செந்நாப் புலவர் அகத்திணையில் பாடிய நூல்கள். அகப்பொருள் இலக்கணத்தை இறையனரே இயற்றினரென்பது, மெய்யேனும் பொய்யேனும், அது அவர் வகுத்ததும் தகுமென்றே சங்கப் புலவரும் மற்றுளோரும் ஏற்றனர். காதலின் மெய்த்திறங்காட்டி மற்றதெல்லாம் பொய்யென மாந்தர் வெறுக்குமாறு அவரறியாமலே செய்கின்ற சூழ்ச்சியாலன்றோ களவெனும்பேரும் பெற்றதென நக்கீரர் காட்டுகின்றூர். தற்காலம் சினிமா'விற்கும் நாடகக் கொட்டிலிற்கும் இன்பம் இவையென்றெண்ணிச் சாய்கின்ற மாக்களுக்கு, அந்நேரம் தம் மில்லகத்து மனைவிமக்களோடும் மற்றுள சுற்றமோடும் தீதிலாவகை அளவளாவி உரையாடும் இன்பமேனும், கவிகளை போதியோதிக் களிக்கின்ற இன்பமேனும், பிறர்துயர் களைந்தவர் திருந்து முகங் காணப்பெறு மின்பமேனும், எம்மையாளுடையான் கோயில் கொண்டெழுந்தருளும் காட்சியால் வருமின்பமேனும், இன்னபிற இன்பங்கள் எள்ளளவேனும் அநுபவிக்கப் பழகியுளராயின், அன்னர் தம்மருங் காலமும் தங்கைப் பொருளும் அவலமாகப் பின்னங்குச் செல்வாரோ! அவ்வாறே அகத்தைப் பற்றிய காதலின் உயர்வையும், ஒத்த அன்பினலன்றி இன்பம் இலதெனும் வாய்மையும், மனம்புணரா வழி மெய் பயிறலி னிழிவையும் சொல்லாமற் சொல்லிவைக்கும் பேருதவி புரிகின்றன சான்றோர் வகுத்த அகத்திணைப் பாசுரங்கள். கோவையினதழகில் ஈடுபட்ட வொருவன் களியாட்டபரும் காமுகனுப் அதன்பின் அமையான்.

''தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே'' என்று கவியரசு கம்பர் தேற்றேகாரம் அமைத்துச் செப்பியதின் மெய்ப்பொருள் பிள்ளையவர்களைப் போன்ற அறிஞர்க்குப் புதியதல்ல. அவா அன்பாகி, அன்பு அருளாகித் திரிவதும் மெய்ம்முறை என்று திருவாளர் மீனுக்ஷிசுந்தரம் இப்பத்திரிகையில் விளக்கி வருகின்றதும் இப்பனையே குறிக்கின்றது. எப்பொருட்கும் மெய்ப்பொருள்கண்ட புலவர், அறம்பொரு ளின்பமென்னும் நால்வகைப் பேறுகளுள் இன்பத்தின் மெய்யிலக்கணம் இதுவென வகுப்பதும் அவ்விலக்கிணத்திற் கிணங்கிய இலக்கிய மமைப்பதும் குறையாமோ! திருவாசகத்திலும் அகத்திணை மருவிய பாசுரங்கள் இருக்கவில்லையோ. திருவள்ளுவர் காமத்துப்பால் எழுத நினைத்தனர் என்றபின் திருக்கோவை எப்பழிக்குப் பாத்திரமாயது!

இடக்கராய சொற்களும் புணர்ச்சி முதலாய செயல்களின் வருணனைகளும் விரவி வருதலாற் கலைநூல் எதுவும் பழுதுறுது. அழகின் மகிழ்ச்சியாய கலைகளின் நுணுக்கத்தில் moral, immoral எனும் வேற்றுமை இல்லை. இவ்விரு பதங்களுக்கு நேரான தமிழ்மொழியே அகராதியில் காணலரிது. இச்சொற்களையும் வருணனைகளையும் எடுத்து ஆளுவார் ஓதுவார் இருதிறத்தோரது மனநிலை இருப்பதற்கேற்ப நன்மையும் தீமையும் விளையும்.

மேன்மைவாய்ந்த நூல் எதுவென்று மதிப்பதற்கு ஓர் அறிகுறி உளது. அது யாதெனில், படிக்குங்கால் இன்பமும், படித்தபின் அவ்வின்பமே பின்னுகப் படித்தோன் முன்னோக்கும் பான்மையும் எய்துவிக்கின்ற நூற்களே நல்ல நூல்கள். இவ்வளவு கொண்டு நோக்கினுல், பேரின்பம் இருக்க இச்சிற்றின்பத்தைப் பாடினரோ இம்மணிவாசகர் என்று, திருவாளர் வையாபுரிப்பிள்ளை அவர்களை இரங்குமாறு செய்ததொன்றே திருச்சிற்றம்பலக் கோவையின் தூய்மைக்கும் வாய்மைக்கும் மாறுச் சான்றுகும்.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(346-வது பக்கத் தொடர்ச்சி)

16. சாகாத் தூக்கு

போரினில் தோற்று னல்லன். கவருடிப் பெருநிதி கவிழ்த்தா னல்லன். மதுவுண்டு அருந்தனம் மாறினனல்லன். பிறன்மனை விழைந்தானல்லன். பொய்க்கரி புகன்றுனல்லன். இழிவுற இரந்து இல்லெனும் எவ்வம் எற்றுனல்லன். அன்னவர் மனம்புழுங்கிப் பெரிதும் அழுவுமெனினும் காலவளவில் ஆறுதல் கூடும். மற்றுத் தான் செய்த தீவினை எதுமின்றி வஞ்சர்தம் சூழ்ச்சியால் மானமாம் மணியிழந்து அஞ்சிய சித்ராங்கனது நெஞ்சம் எரிமலையென்ன என்றும் ஆறுவது அருமை. இன்னவாறு பல வெண்ணி வேடுவர் விடுசரம் பாய்ந்த களபக்கன்றென உளம்நொந்து உழன்றுன் இக்கோமகன். இந்நிலை நின்றும் உய்யும்வகை தேர்ந்து தொடர்வதற்குரிய வழி எதுவென ஓராது பலசால் நினைத்தன விடுத்தும் விடுத்தன நினைத்தும் அடவியுட் புகுந்தோன் ஆறுதேடி யலையுமாறு திரிந்தவன் தன்மையனுகித் திகைக்கு மவ்வினவலை யீன்றேன் அந்நாள் கண்டனனாயின் வயிறெரிய வாயெற்றி முன்மாய்ந்தது பொய்யெனப் பின்னும் மாய்வன். ஆற்றிடைப் பாய்ந்து அறவே மூழ்கியென் வீணுள் ஒழிப்பல் என்றுன்னுவன் ஒருவேளை. காவுரு வெய்தி வேற்றார் நண்ணி எற்றுனுங்டே என்வாணுள் கழிப்பலெனக் கருதுவன் மறுவேளை. கானுட் புகுந்து காய் கனி தின்றே உயிர்போமளவும் உற்று வாழ்வல் எனச் சிந்தித்திடுவன் சிலவேளை. "காட்டினில் கடும்புலி கேசரி மதக் களிறனவே! சச்சரா ளெளியும், சூர்ப்பேய் சுழலும்! ஆம், ஆயினென்! மந்திரம் சிலவுள இவைதமைக் கடியவும் கட்டவுமன்றே. அலதெனின், அவை ஊனைத் தின்னும் உதிரம் பருகும் உயிர்தனைக் கொல்லும். கொடியன் கொடியன் மானுடன்கொடியன். மனத்தைக் கொன்று மானம் தின்று புகழைநக்கிப் பெற்ற பேரிற்கே உரையாலுமொருபார்வையாலும்இறுதிகூழும் மனித விலங்குகள் பயிலாக் காடு எல்லாப்படியாலும் வசித்தற் கமைந்தது. வனமுறை விலங்கினம் இரைதனைக் கொல்லுமுன் இரங்கி அழா; கொன்றபின் சிரிக்கா! உளப்பு நிரம்பத் தின்றபின் தின்ற இரையை நன்றியொடு வாழ்த்தவும் வாழ்த்தலாம். ஆங்கு அருந்தவ ரிருப்பர், அவரடி தொழுது உய்வேன். வனசரரிருப்பர், அவர் சிறுகுடில் சேர்வேன். மானின மிருக்கும், அவைதமை மேய்ப்பேன். பூவின் செல்வம் பொலிவுற வளர்ப்பேன். மரவுரிதரிப்பேன். கருஞ்சடை முடிப்பேன். அருவியாடுவேன். வள்ளிகொள்வேன். சினைதனில் தூங்குவேன். இன்னிசை பாடுவேன். ஆம், பாவம், இந்தப் பாண்மகள் கூட மனிதன் இழைத்த சதியால்தான் சிதைந்துளாள் எனக் காண்கிறது. அவளும் வந்துவிட்டாலோ என் காட்டிற்கு! பழுமரமொன்றில் புட்பக்கூடு பாங்குற அமைத்து இருவேமும் அலகுகொத்திச் சிறகால் வீசின்று குயிலென வாழ்வோம். நான் கிழங்கிற்கழ்வேன், அவள் நறுமலர் தொடுப்பாள். நான் தீங்கனி பறிப்பேன், அவள் செந்தேன் வடிப்பாள். ஆமா கறப்பேன், அரணிகடைவாள்............ என்ன வாயினுளோ அவள்.........எங்குப் போயினளோ? கலாநாதனை வினவினுல் தெரியும்......உத்தமனென்றுல் இக்கம்மியன் உத்தமன். அவனையே யான் கொல்விக்க முயன்றேன் என்று காரணத்தொடு கேட்டும் எனதூய்மையை அயிர்த்திலன். அன்ன பெருந்தகைக்குக் குற்றேவல் செய்யவும் யான் அருகனே!... ....சந்திரசேகரர்தானென்ன, நீதிபதிதானென்ன, சேனைத்தலைவர் தேவதாரர்தா னென்ன, அவர்களும் சங்கை கொண்டிலர், பெரியர். நரபாலன் சூழ்ச்சியிது என்றனர். நரபாலனே, என் சிற்றப்பனே நிச்சயமில்லை.........அல்லது இருவரும் சேர்ந்து செய்ததோ! ......அம்ம! என்ன துஷ்டர்களடா துஷ்டர் இம்மனிதர். உலகமே கொடியது......அந்தப் பூமகள் வந்தாளே அவன் நடையே நிற்கின்றது என்நினைவில்......ஆமாம், மரத்தின்மேல் வசிக்கின்றேம், கீழே ஒரு புலிவந்து படுத்துவிட்டால் என்னசெய்வது!... . காடி மரமேறும் என்பார்கள்......என்வாளும் வில்லும் எடுத்துத்தான் போகவேண்டும்.........இந்தத்துஷ்ட மிருகங்களையும் மனிதர்களையும் ஏன்தான் படைத்தானே நாற்றலைப் பிரம்மன். உலகம் ஆக்கியோன் அறிவிலி, காப்போன் துயின்றுகிடக்கும் மடியானன். அழிக்குமச் சுடலையாடிப் பித்தனும் தொழிலை மறந்தான். இம்மூவர்க்கிடையே துஷ்டரும் தூர்த்தரும் பொய்யரும் புறங்கூறுவோரும் போவாப்பேயரும் கள்வரும் கயவரும் வளமோங்கி வளர்கின்றனர். நன்று நன்று முத்தொழிலாற்றும் முதல்வர் திறம்! என்றின்னவாறு சித்ராங்கன் களிமயக்குற்ற காலவேகம்போன்ற தன் நினைவின் பிடர்த்தலையமர்ந்து இரியல்போயினன். மூதறிவுடையீர், நீவிர் ஆங்கண் இருப்பீராயின், அண்ணல் மனத்தைப் புண்படச்செய்யும் எண்ணத்தனை ஓர்வீராயின், "மைந்த, மடமைமாறு நின் இளமை தன்னுல் இன்னணம் நினைத்தனை. நின்கோசா மதனில் கயவர் இருவர்பட்டனராயின் உலகே கொடிய தென்றுன்னுதல் தகுமோ! நின் ஸ்தாவிபுலாக நியாயம் பொய்த்ததுகாண். கம்மியன் கலாநாதனமுடைத்து இவ்வவனி. நீதித்தலைவர் தானைத்தலைவர் நகரித்தலைவர் ஈங்குளர். ஏன், உன்காட்டு வாழ்க்கைக்குக் கூட்டுறவு கருதிய இப்பாண்மகளை மறந்தனை கொல்லோ. நின்தந்தை துஷ்டனல்லன். ஆதலின் ஐய, உலகந்தன்னைப் பொதுப்படப் பழியேல். அயனையும் அரியையும் அரனையும் நோகேல். அன்னர் திருவுளத்தின் வண்ணம் அறியாயாயின் அறிவான்கருதி செய்தவங்கள் செய்து உய்வாய். தன்வினையன்றித் தன்னைச் சுடுவது புறத்தேயிலது," எனச் சான்றேர் ஆய்ந்த முதக்குறைவு ஓதிப் பிள்ளை மதியை ஆட்கொண்டிருப்பீர்.

புறத்திருள் பீறிச் சந்திரன்கீழ்த்திசை யெழவெழச் சித்ராங்கன் அகத்துள இருளும் ஒருசிறிது தெளியலாயிற்று. தந்தையே தன்னைப் பொல்லாப்பிள்ளையென எண்ணுவண்ணம் அவரிடம் சென்று நரபாலனையும் மகோதரனையும் அங்கு வரவழைத்து விராடபத்ரன் முன்னிலையில் விஷயமெல்லாம் தீர ஆராயவைப்பின் தன் வசைநீரும் என்று கருத்துட் கொண்டான். கொண்டு மன்னவன் இருந்த விடுதிக் கேகி முன்வாயில் புக நாணினனுய்ச் சுருங்கை வழியாய் உட்சென்று மேனிலை ஏற முயன்றபோது ஆங்கிருந்த வாயில்காப்போன் தடுத்து, "ஐய, நீர் இப்படி கடக்காவண்ணம் காக்க வேந்தரெனக்கு விதித்துளர்; வேண்டுமாயின் யான் சென்று இங்கு நீர் வந்துளது தெரிவித்து மறுமொழி கொண்டுவருகின்றேன்," என்று சாற்றுமளவில் விராடபத்ரனும், வியப்பொடு வியாகுலமும் கூடிய முகத்தராய்த் தேவதாரரும்

அவ்விடம் நணுகினர். சித்ராங்கன், "எந்தைசுகமோ?" எனச் சேனைத்தலைவனை வினவினான். அன்னதற்கு அவன் பதிலுரைப்பதன்முன் விராடபத்ரன், "மைந்தா, உந்தை இனி யுன்னைக்காண விழைந்திலர். எனினும் அவர் வாய்மொழி விளம்பும் ஆணையுள்ளேன். இன்று பிறந்த வசையை நீ மறுக்கவோ வையம் மறக்கவோ செய்கின்றவரையில்......நந்தொல்குலக் கீர்த்தியைக் கருதி நீ இத்தேவதாரற் கடங்கி அவரது மாளிகை மதிற்குப் புறமேகாமல் வசித்து வரவேண்டுமென்று நம் வேந்தர் பணித்துளர்.........யான் எவ்வளவு கூறியும் கேட்டிலர்," என உரைக்கச் சித்ராங்கன் தேவதாரனது கரங்களைப் பற்றி, "நண்ப, இஃதுண்மையோ! நம்மனை சிறைக்கோட்டம் எந்நாள் ஆயது! நீவிரும் எனக்குச் சிறைகாப்பாளனுவீர் கொல்லோ!" எனச் சொல்லலுற்றுச் சிரித்தான்.

"இளவரசே, மனமுவந்து இவ்விதமொழி இயம்பாய். அரசனது ஆணைக்கிரங்கி நீ என் பார்வையில் சிறிது காலம் வசிப்பதன்றிப் பிறிதொன்றில்லை. நின்னையான் விருந்தாக விழைகின்றேன்."

"நன்று நன்று, வலிந்து கொண்டு நீர் விருந்தோம்பல் வெகு நன்று! இன்னதற்குக் காரணந்தான் என்னவோ! கொன்ற கை கழுவாது கட்குடிக்கு மொரு கயவன் பிதற்றிய சில புன்சொல்லும் இளவரசன் கீர்த்தியை மாசுபடுத்த வல்லதேயோ?" என்று சித்ராங்கன் சினத்தொடு வினவினான்.

"மைந்தா, சித்ராங்கா, புன்சொல்லாயினும் யதை மறுக்காவரையில் யுதிட்டிரன் புகழையும் பொசுக்க வல்லதாகும்," என்றனன் விராடபத்ரன்.

"மறுப்பதெனதை? குலப்பேர் போற்றப் பிறந்த என்னப்பனே, மறுப்பதெதனை! புரவலன் கிடக்க ஒரு இரவலன் பேரையும் கெடுத்தற்கியலா அக்கீழ்மகன் வார்த்தைக் கீடாகவா யான் உத்தரம் சொல்லவேண்டும்...அவனைக் கொண்டுவாருங்கள்...கழுமரத்தைக்காட்டுங்கள்...நகக்கண்தோறும் காய்ச்சிய ஊசி பாய்ச்சுங்கள்...கூறிய தவ்வளவும் பொய்யென்று அவனே மறுக்கின்றான் பாருங்கள்!"

"தூக்குமரம் இதற்குள் அதன் வேலையை முடித்திருக்கு மாகையால் கழுமரமும் காய்ச்சியவூசியும் பயன்படா. மகோதரனைத் தூக்கிலிட்டு நாலைந்து நாழிகைகளும் கழிந்துபோயின!"

"இவ்வளவு விரைவு எதற்காகவோ! எனதுபேரில் பட்ட மாசு படிந்தே யிருத்தல்வேண்டிச் செய்த உபாயமிதுவென்பது நேற்றுப் பிறந்த பிள்ளையு மறியும்."

"அதுதான் வழக்கம். தோல்வி யடைந்தவனையுடனே தூக்குமரத்திற் கனுப்பிவிட வேண்டும். இருப்பினும் சித்ராங்கா, அவனேசியதற்கு நீ யெதிர்மாற்றம் கூறியிருப்பாயானால் மேல்விசாரணை செய்வதற்கு அவனைச் சிறிதுகாலம் வைத்திருப்பேன். நீயோ, மௌனம் பூண்டாய். ஆதலின் அவன் வாயொடு உயிரும் தாமதமின்றி நசிப்பதே உசிதமல்லவா?"

"தெய்வமே! மகோதரனை யான் ஒருவேளை மன்னிப்பினும் மன்னித்திடுவேன். என் பிதாவொடு பிறந்தும் அக்கொலைஞன் சொல்லை மெய்யெனப் பாவிக்கும் நும்மை ஒருபோதும் சகியேன்.........ஐய, அக்கம்மியன் உயிரை வௌவ நான் கூசாது சூழ்ந்திருப்பேன் என மதிக்கின்றீரோ?"

"இளவரசே, வினவிற்கு விடையிறுத் துன்னுடன் வாதாட நான் வாய்த்தவனல்லன்...எனினும் இதுசொல்...சாலியன் வீட்டுச் சாளரத்திற்கு நீ யேணியிட்டது இல்லையோ? கம்மியனுன்னைக் காலால் துமித்ததும் பொய்யோ? வாய்பொத்திக் கைவிதிர்த்து இன்று மகோதரனைச் சொல்லடக்க நீ முயன்றதும் எதுகருதியோ!...இத்தனைபழிக்கும் பாத்திரனு யிருக்கும் நீ பலர்காணப் பயிலாமல் தனிவசிப்பது தக்கதேயன்றோ!

சிற்றப்பன் வீசிய பாசச்சுருக்கு, தன்கழுத்தில் இறுகவே நாவும் விழியும் பிதுங்கித் திகைக்கும் சித்ராங்கன் மறுவுரை பகருமாற்றல் இலனாயினன். "பெரியோய், நின்வஞ்சமே வாழ்க, விடை யெனக்குத் தருதி," என மொழிந்து படைத்தலைவனை நோக்கி, "ஐய, உம்முடன் சிறையேகச் சித்தமாயினேன். வம்மின்," என்றவனோடகன்றனன்.

கலாநாதனும் மகோதரனும் செய்த அமர் முடியச் சித்ராங்கன் முதலாயினோர் அகன்றதும், அக்களத்தைச் சூழ்ந்து அடர்ந்து நின்ற கூட்டத்தினர் இருபிரிவினராய்ப் பிரிந்தனர். அப்பிரிவுகளில் சிறியது இரத்தினபுரியின்கண் செல்வமும் கண்ணியமும் பொருந்தி வசித்தவர்களாலானது. இவர் கலாநாதனருகு குழுமி அவன் பெற்ற வெற்றியைப் பெரிதும் புகழ்ந்து வியந்தனர். போர் புரிந்தது கலாநாதனாயினும் அடைந்த வெற்றியை ஒவ்வொருவனும் தனித்தனித் தனதாகவே பாராட்டி மகிழ்ந்தான். இவ்வாறு எழுற்ற வொருவன் அக்கணமே கலாநாதனுக்கு ஓர் வெற்றி விருந்து அவ்வூர்ப் பொதுமண்டபத்தில் செய்திட வேண்டுமெனச் செப்பினான். நகரத் தலைவர்முதலனைவரும் அதற்கு ஒவ்வினர். தன்னின்னுயிரை மனையகத்து வைத்து வந்துளானாதலின் கலாநாதன் இவ்விருந்திற்கேக இசையானாகிப் பெரிதும் வருந்தினான். அதுகண்ட கருணாகரர் அவனைத் தனியிடம் அழைத்துக் "கலாநாதா, நீ, இந்த விருந்தை மறுக்கலாகாது. நீதிபதி நகரத் தலைவர் மற்றுமிவ்வூர் அதிகாரிகளனைவரும் அங்கு வருகிறார்கள். சேனைத் தலைவரும் வருவார். அன்னவர் நன்மதிப்பை நீ பெறுவதற்கிது எற்ற சமயம். இந்நகர் ஆயுதச்சாலையைப் புதுப்பிக்கப் போகின்றார்களாம். ஆயின் நீ ஆக்கிய படைகளையே அவர் வாங்கலாம். தொழில் இலாபத்தை நழுவவிடாதே. இனி நீ வருவாயிலேயே விழிவைத்திருக்க வேண்டாவோ?" என்றனர்.

"கருணாகரரே, என் வருவாய்க்கு ஒருநாளும் குறைவு வராது. காந்திமதி காத்திருப்பாள். நான் வரத் தாழ்த்தால் ஐயமுற்றுப் பிணங்குவாள்......பாண்மகளொருத்தியால் நான் பட்டபாடு இந்தச் சன்மத்திற்குப் போதாதா!"

"நான் சொல்வதைக்கேள். நின்னினும் பெரியோரழைக்க நீ எதிர்முகம் காட்டல் அழகன்று. நான் சென்று காந்திக்கு உற்றதைச் சொல்லி யென் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகிறேன். நாளைக் காலையில் என்னகம் வா," எனக் கருணாகரர் விதித்தனர்.

இதற்குள் அங்கிருந்த அவனது தோழர்களிற் சிலர் கலாநாதனை வாயால் வற்புறுத்தியும் கையால் இழுத்துக் கொண்டும் பொது மண்டபத்திற்கு உய்த்தனர். அங்கு அயில்வோர்தம் அமலையொடு விருந்தும் சிறக்க முடிந்தது. முடிந்தபின் கலாநாதனது போராற்றலை வியந்தும் அவனது நற்குண நற்செயல்களை மகிழ்ந்தும், அவனுக்கு மணவினை நிகழும் நாள் அண்மியதென உணர்ந்து வாழ்த்தியும், மதிப்புரை பலர் பேசி அவனுக்கு நன்கொடைப் பரிசிலும் அளிப்பதற்கான முயற்சியும் செய்யக் கருதினர். முடிவில் கலாநாதனும் எழுந்து, "பெரியீர், யான் செய்தது அரிய தொன்றென மதிக்க வேண்டா. விதியற்றவொரு விதவையின் வழக்கை

யெடுத்தாடிய எனக்கு வெகுமதி யளிப்பீராயின் இத்தொன்னகர்க் குலகுன்னளவும் தீராத வசையே கண்டீர். என்செயலை அரியதெனப் பாராட்டுவீராயின் இப்பதியில் உத்தமவீரர் கிடைப்பது அரிதென்றல்லவோ பிறநகர் வைகுவோர் எண்ணற்கு இடமுண்டாகும். இந்நாள் யான் செய்த இச்சிறு செயலை என்னின் சிறக்க முடித்திருப்பார் பலர் இவ்வவைக்க ணிருப்பது திண்ணம். ஏனெனில் அம்மூர்க்கனின் தலையை யான் மண்ணின் குடமென ஓடோடாக வுடைக்காது போயினேன். அப்பொழுதல்லவோ அவன் பொய்நிறைந்த வாய் பயன்படாமல் போயிருக்கும். எம்மிளவரசன் சித்ராங்கக் கோமகனை அப்பெரும்பழியும் நண்ணியிராது.உடைத்திருப்பேன். நான் செய்து தந்த தலைக்கவசத்தை மகோதரன் அணிந்து வந்ததாற்றான் அது செய்ய இயலாமற் போயிற்று. அன்பே தூண்ட நீவிரெனக்கு அளிக்கக் கருதும் இப்பொருளைப் பாஞ்சாலிக்குச் சீவனதனமாய்க் கொடுத்திடுமின்" எனப் பெருந்தன்மை பெருகச் சொன்னான்.

"ஆம், இது தக்கதே. எனினும் பாஞ்சாலிக்குக் கொடுத்தபின் குறைவெய்திக் கலாநாதற்கும் கொடுக்க இயலா வறியதோ இச்செழுநகர்......ஒன்று மறந்தோம். தனஞ்சயனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கிரியைகளைச் செய்யப் பாஞ்சாலியைத் தனியே விடுத்து நாமிங்கே தாழ்வது அழகன்று, வாருங்கள் போவோம்," என்று சந்த்ரசேகரர் அழைக்க எல்லோரும் அம்மண்டபத்தை விட்டு நீங்குபவராகி நடக்கும்வழியில், தனஞ்சயன் மாண்டதும் கலாநாதன் வென்றதும் நடந்த விருந்தின் வைபவமும் ஆகிய அன்னபல நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக் கொள்வதில், அந்த விருந்திற்கு முதற்காரணமான தனஞ்சயன் அங்கு வருவதற்கில்லாதது தவிர விருந்திற்குப் பிறிதொரு குறையிலை என்பாரும், 'பாவம் அவன் இங்கு வந்திருக்கக் கூடுமானால் இன்றடைந்த வெற்றி தனதேயென உரிமை பாராட்டித் தன்னைக் கொன்ற பழியைத் தானே தீர்த்ததாகத் தற்புகழ்ச்சி சாற்றிக் கொள்வானன்றோ' என்பாரும், 'ஐயயோ இவனுயிரை அறியாக் கேடாய்க் கொண்டுவந்து விட்டேனே என எமதர்மன் வருந்தும்படி இப்பொழுதங்கே அவனின் காதுபுளிக்கத் தனஞ்சயன் சளசள வென்று பேச்சுப் பொழிந்துகொண்டிருப்பான்' என்பாருமாய்த் தம்முள் நகைப்பாராகப் போகும்போது, விரிந்த குழலோடும் அழுகைக்குரலோடும் பாஞ்சாலி தொடரவரும் பிணக்கோலம் முற்பட, அவர் அதனுடன் கலந்து சாக்காடு சென்று அங்குத் தனஞ்சயனது கடைக்கருமங்களைச் செவ்வனே செய்வித்துத் தந்தம் இல்லம் செல்லலுற்றனர்.

இவ்வாறு சென்று சேர்ந்தவர் மனைதோறும் தம் வரவைக்கருதி ஆவலுடன் காத்திருந்த சிறுவர் வயோதிகர் மகளிர் ஆயினோர்க்கு அவர், தனிப்போரின் திறத்தையும் உண்டியின் சுவையையும் மயான வைராக்யங்களையும், நடந்தவைகளை நடந்தபடி தாம் எண்ணியவைகளை யெண்ணியபடி, சொல்லி அமைவாராயின் ஒருவேளை முன்னிரவிலேயே வரலாறு முடிந்திருக்கலாம். ஆனால், இவ்விதச் சந்தர்ப்பங்களில், நடந்தது ஒன்றைச் சொன்னால் சொல்வோன் மனோபாவத்திற்கேற்ப நடவாதது பல நவில்வது மானுட இயற்கையேயாகையால் வீடெல்லாம் நள்ளிரவு கழிந்தும் பேச்சுக்குரல் அடங்கிற்றில்லை. உணவின் சுவையும் ஊரார் இசையும் ஒருங்கே மயக்க வீடுசென்றதும் கண்ணயர்ந்தவன் கலாநாதனே.

காளிகோயிலினின்று பிரிந்து வாய்விருந்து வேண்டிச்சென்றோர் செந்நிறம் அவ்வாறாக, அவ்வூர்ப் பொதுமக்களாலாய மறுசாரார் கண்விருந்து கருதி மரணதண்டனை விதிக்கப்பெற்றுக் கொலைக்களம் ஏகும் மகோதரனைத் தொடர்வாராயினர். இது உலகவழக்கே. அயலோரை மணக்கோலம் காண்பதனினும் பிணக்கோலம் காணவே பொதுசனங்கள் பெரிதும் விரைவர். ஏனெனில் விடையும் வெகு எளிது. பிறர்க்கு நேர்ந்த இன்பத்தைவிடத் துன்பமே மற்றவர்க்குச் சாதாரணமாய்த் திருப்தியைத் தருகின்றது. எனவே, விலங்கிட்டுக் காவல்பண்டியில் உய்த்துச்சென்ற மகோதரனைச் சூழ்ந்த கூட்டத்தின் குதூகலம் வரம்பிற் கடங்காததாயிற்று. இவ்வாறு சூழ்ந்தவர்க்கு மகோதரன் வழியெல்லாம் சித்திங்கன் மீது அவன் முன் சாற்றியபழியைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு வந்தான். இதையவன் ஒரேவாய்ப்பாட்டில் மொழிமாறாமல் சொல்வதிலிருந்து கற்பித்த பாடத்தைக் கடமைப்படி கொட்டி விடுகின்றான் என்பது எல்லோர்க்கும் தெரியவந்தது. ஒருதரத்திற்கு நூறுதரமாய் உரு எற்றினால் பொய் மெய்யாய்விடும் என்றவன் மதித்தான் போலும். இப்படிச் சென்றவர் அந்நகரின் எல்லையினருகே சேரும்போது தூரத்தில் ஏதோவொன்றைத் தம்முள் சுட்டிக்காட்டிப் பேசிக் கொண்டனர். மகோதரனும் காட்டியோர் விரல்வழி வண்டியினுள்ளிருந்தே எட்டிப்பார்க்க, ஆற்றங்கரை மணலில் இருபதுமுழ உயரம் தூக்குமரம், ஏற ஏணியும் இறங்கக் கயிறுமாய் நாட்டியிருந்ததைக் கண்டான். அவன் வாயும் மூடியது. 'உன்னைச் சாகாமல் தூக்கும் வகை சாதித்திடுவேன், சித்ராங்கனே நின்னைக் கொலைக் கேவினான் எனத் தட்டாமல் சொல்' என்று நாபாலனும் தாமோதரனும் மாற்றிமாற்றிச் சொன்னமொழி பொய்த்திடுமோ என்னும் பயம் அவன்மனதில் குடிகொள்ளலாயிற்று. 'சங்கேதப்படி நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன், இனி அவர்திறத்தில் செய்யவேண்டியதைச் செய்யாது விட்டாலோ.........நம்பிக்கைத் துரோகம் அவர்களுக்கு வெகு எளிய காரியமாயிற்றே, ...மேலும் நானுயிருடன் இருந்தால் ஒருவேளை யவர்களைக் காட்டிவிடுவதும் கூடும் என்றஞ்சி என் சாவில் தானே தம் உறுதி தேடுவார் அப்பாதகர்," என்று இந்த மூர்க்கன் பலவாறு கலங்கித் திகைக்கையில், தூக்குமரத்தினயலில் தாமோதரன் கொலையாளியுடன் பேசிக் கொண்டு நிற்பதைக்காண இவன் சந்தேகம் நீங்கி அமைதியடைந்தான். இரட்டைச் சுருக்கு இழுத்து மூடிய அவர் திட்டம் பண்ணிக்கொண்டு மிருக்கலாமே!

பண்டியும் கொலைக்களம் சேர்ந்தது. காவலாளர் மகோதரனைக் கொலையாளி வசமாக்கினர். தண்டனையும் விதிப்படி நிறைவேறிற்றென்றே தோன்றியது. மகோதரன் தன்னுயிர்க்கு மன்றாடி அரைக்கணமேஉடல் துடித்து ஓய்ந்துவிட்டான். இது அவனைத் தொடர்ந்து வந்த மாக்களுக்கு அளவற்ற கோபம் உண்டாக்கியது. "சீ,சீ, நாம்பட்ட சிரமத்திற் கெல்லாம் இவ்வளவுதானா!" என்று எல்லோரும் மகோதரன்மாட்டுச் சலிப்படைந்தனர்.' தாம் கண்கொண்டு களிக்க இக்காட்சியை யுவன் வெகுநேரம் வளர்த்தாதற்குத் தம் நல்வினைப் பயன் போதாக் குறையேயெனச் சிலர் தம்மையே நொந்தனர்.

எனினும், இவர்களது வீட்டிலுங்கூடத்தான் அன்றிரவு விளக்கு அணையவில்லை. கண்ணுற்கண்ட அளவே காதாற்கேட்ட அளவே வாயால் பிறர்க்கு உரைக்க வேண்டு மென்னும் சூத்திரம் எந்த நூலில் கூறப்பட்டுள்ளது!

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

அன்பு ஆராய்ச்சி.

[348-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்பே சிவம்.

இதற்குள் இவ்வன்பு பெருக்கெடுத்து எல்லோரையும் தனக்குள் அமிழ்த்தி விட்டது. அதற்கு அருள் என்று பெயர் கூறுவர். அன்பு என்பது நாம் சொல்லிவருகிற முறையில் அருளையும் உள்ளடக்கியது என்றாலும் சில இடங்களில் அதனை அருளின் நின்றும் வேறுபிரித்துக் குறுகிய பொருள் கொள்ளுவர் பெரியோர். அன்பென்பதற்குத் தொடர்புடையார்கண் காதலுடையானாதல் என்றும், அருள் என்பதற்குத் "தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை" என்றும் பரிமேலழகர் பொருள் கூறுவர். புறநானூற்றுரையாளரும் "அருளாவது ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம். அன்பாவது தன்னாற் புரக்கப்படுவார் மேலுளதாகிய காதல்" என்று பொருள் எழுதியுள்ளார். மழையைப்போல எங்கும் அன்பினைப் பொழியும்போது தொடர்புபற்றியா பொழிகின்றனர். இல்லை. ஆகவே அந்நிலையில் அருள் பிறந்துவிட்டதெனலாம். அருள் நெறியே போவார்க்கு ஒரு சிறு முறையினைக் கற்பிக்கின்றார் நாயனார்.

> வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
> மெலியார்மேற் செல்லு மிடத்து.

நாயனார் உயரிய கொள்கைகளை எடுத்தோதுவதோடு நின்றுவிடார். அவற்றினை உலக வாழ்க்கையில் கையாள்வதற்கு வேண்டிய முறையினையும் இவ்வாறு எளிதில் உணர்த்திக்கொண்டேபோவார். இதனாலன்றோ இவரது நூல் மற்றைய எல்லாநூல்களையும் விட உயர்ந்துவிளங்குவது. நிற்க. வலியார்முன் தன்னை நினைப்பவன் தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதின் ஊன் உண்பானோ? தன்னை அவ்வாட்டின் நிலையில் வைத்து நோக்கித் துடிதுடித்துப் பதைப்பானன்றோ. அருள்நெறியில் வாழ்வார் தமக்கு எவர் எத்தனை தீங்கிழைப்பினும் சிறிதும் நெறிதவறிப் போதல் ஆகுமோ? ஆனால் அது எளிதில் கைகூடுவதொன்றல்ல; தவம் செய்து பழகுதல் வேண்டும். தவம் என்பது கண்கட்டிவித்தை அல்ல.

> உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற் குரு.

இவ்வளவே அன்பு நெறியில் வேண்டியது. அதை வேண்டித்தான் அன்பர்கள் தவம் கிடப்பார்கள். ஆனால் அத்தகையோர் பலராலும் போற்றப்படுதலால் வஞ்சித்துப் பிழைப்பதெனத் தொடங்கினால் அதனிலும் கொலைப்பழி வேறேது. உலகை மயக்குவோர் அன்பராவது எது. பிறரைப் பற்றிப் பேசுவானேன்.

> வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
> ஐந்தும் அகத்தே நகும்.

அருள்வழியின் நின்ற ஆன்றோர் பிறர் பொருளைத் திருடவும் எண்ணுவரா.

> அருள்கருதி அன்புடைய ராதல்பொருள் கருதிப்
> பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

திருடுவோர் செந்தண்மை பூண்டொழுகுதல் எங்ஙனம். அறவோர் வாய்ச்சொற்கள் எல்லாம் நன்மை பயப்பனவே.

> வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> தீமை இலாத சொலல்.

ஆகவே,

> பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்.

வாய்மையினின்றும் பிறழ்ந்தால் தன்னெஞ்சே தன்னைச் சுடும். வாய்மையைப்பற்றிப் பேசிவருகையில் துறவின் உண்மையியல்பைக் கூறுகின்றார். இல்லறத்தை விட்டுத்தான் துறவியாக வேண்டுமென்பதில்லை. இல்லறத்தில் இருந்துகொண்டே துறவின் இயல்பை எல்லாம் கைக்கொண்டு ஒழுகலாம்.

> மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
> தானஞ் செய்வாரில் தலை.

என்றதில் தவத்தொடு தானம் செய்வாரைப்பற்றிக் குறித்துள்ளார். பரிமேலழகரும் "தவமும் தானமும் ஒருங்கு செய்வார்," எனப் பொருள் கூறுகின்றார். வான்சிறப்பிலேயே பரிமேலழகியார் "பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன" என்று குறித்துள்ளார். இல்லறத்தின் நின்றும் தவம் செய்தலும் கூடுமென்று தம் அன்புநெறியின் உயர்வினைக் காட்டினர்.

இனிச் சினமெனும் தீயினை அன்பெனும் நீர் அவித்துவிடும். அருள் உள்ளார்க் கடையாளம் நகையும் உவகையும் அன்றோ? வெகுளியுள்ள இடத்துச் சுளித்துச் சுருங்கிய முகமும் சுண்டி எரியு மனமும் காணலாமேயன்றி உவகையும் நகையும் காண்பதரிது,

> நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
> பகையும் உளவோ பிற

அம்மட்டோ,

> சினமென்னும் சேர்ந்தார்க் கொல்லி இனம்என்னும்
> ஏமப் புணையைச் சுடும்.

ஆதலின் முன் நாம் ஏறிவந்த படிக்கட்டுக்களினின்று கீழ் உருட்டி விடுவதன்றோ இந்தச் சினம். இன்னா செய்யாமையின் இன்றியமையாமையை இத்துணையும் போக்கிச் சொல்லவேண்டுமோ? முன்னர் நன்றி செய்தார் தீமை செய்யின் அவர் செய்த நன்றியை நினைத்துத் தீமையை மற என்றார், பின்னர் யார் தீமை செய்யினும் மற என்றார். இங்கு இன்னும் ஓர் படி உயரப் போகின்றார்,

> இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்.

கொல்லாமை என்பது உயர்ந்ததோர் அறமே. ஆனால் அஃது சிறந்து விளங்குவதெங்கே?

> தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
> தின்னுயிர் நீக்கும் வினை.

இதற்கன்றோ அன்னோர் தவஞ் செய்தது. அன்பிற்கு எதிரிடையன்றோ கொலை.

குணமென்னும் குன்றேறிப் போய் அந்தணராக அன்புநெறி எனும் படிக்கட்டுக்களை இவ்வாறுகட்டி வைத்தார். அவை நிலைத்திருக்கவேண்டுமானால் உலகத்தின் பொருள்களின்மீது செல்லும் உள்ளத்தைத் தடுத்தல்வேண்டும். உலகத்துப் பொருள்களை நிலையானவை என்று கருதியல்லவோ அவைஇன்பம் பயக்கின்றன எனஎண்ணி அவற்றிற் கடிமையாகின்றோம். நிலையாமையை அறிந்தவன்

எல்லோர்க்கும் நன்மை செய்கின்றான். அவ்வாறு நிலையாமையை அறிந்தவன் உலகத்துப் பொருள்களை உறுதியாகக் கடைப்பிடிக்காமல் உதைத்துத் தள்ளிப் புறக்கணிக்கின்றான். அப்பொருள்கள்மேல் செல்லும் பற்றுள்ளத்தால் அன்றோ துன்பம் நம்மைத் தொடர்வது. அவற்றை ஒவ்வொன்றாக ஒதுக்கிவிடவே, துன்பம் உண்டாக இடமில்லாமற் போகின்றது. இதுவே துறவு. நிலையாத பொருள்களை நீக்கிவிட்டு நிலையுள்ள பொருளை அறிதல் வேண்டும். அதுதான் எல்லாவற்றிற்கும் சார்பாவது. மெய்யுணர்தலே நம்மை அறிவுள்ள மக்கள்எனக் காட்டுகின்றது.

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எல்லாம் இறைவன் என்பது அப்போது நன்கு விளங்கும். நமக்குள்ளும் இறைவனே இருக்கின்றான் என்பதும் அவனன்றி ஓரணுவும் அசையாதென்பதும்; உண்மையில் நம் செயலெலாம் அவன் செயலே என்பதும், நாம் என்பதற்கே அவனைத் தவிரப் பொருள் வேறு இல்லை என்பதும் புலனாகின்றன. அறிவுநெறியும் அன்புநெறியில் அடங்கியதென்பது இதனால் விளங்குகின்றது.

மேற்சொன்ன குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரை இங்கு ஆராயத் தக்கது. "பொருடோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பதென்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்றவழி அரசன் என்பதோர் சாதியும், சேரமான் என்பதொரு குடியும் வேழநோக்கினை யுடையானென்பது ஓர் வடிவும், சேய் என்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சேரல்இரும்பொறை என்பதோர் சிறப்புப் பெயரும் ஒருபொருளின்கண் கற்பனையாகலின் அவ்வாறுணராது, நிலம்முதல் உயிரீறாகிய தத்துவங்களின் தொகுதி என உணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றாற் காரண காரியங்கள் இரண்டுமின்றி முடிவாய் நிற்பதனை உணர்தலாம்" என்று அவர் எழுதுவது எல்லோரும் போற்றத்தக்கது. இறைவன் உண்மை அறிவு இன்ப உருவன். எல்லாம் இறைவனுருவானால் அவையனைத்தும் உண்மையறிவு இன்பஉருவாதல் வேண்டும். ஆனால் அப்பொருள்களோ, தமது பெயராலும் வடிவாலும் உண்மையை மறைத்துநின்று நம்மை மயக்குகின்றன. ஆகவே மெய்யுணர்தல் வேண்டும். எல்லாப்பொருள்களும் இருக்கின்றன இருக்கின்றன என்னும் வழக்கிற்கு இருப்பிடமாகின்றன. ஒருபொருள் பலவேறு வடிவமும் பலவேறு பெயரும் மாறிமாறிப் பெறினும் கடைசியாகச் சூனியமாகவேனும் இருக்கின்றதென்றே வழங்கி வருகின்றோம். ஆகவே அப்பொருள்களினிடத்தே உளதாந்தன்மையை எல்லோரும் அறிகின்றோம். எல்லாப் பொருள்களும் நமது அறிவிற்குப் புலனாகி விளங்குகின்றமையின், விளக்கமுடையன என்பது தெரிகின்றது. இங்கு விளக்கமாவது அறிவு விளக்கமாதலின் அவை அறிவுருவம் எனவும் அறிகின்றோம். இனி இன்ப உருவம் என்பதில்தான் வருகின்ற முட்டுப்பாடு எல்லாம். அவை இன்ப உருவமானால் நாம் துன்பமுறுவதெப்படி? உண்மையை உணராததனால் தான் வருந்தி உழல்கின்றோம். மேற்சொல்லிய அன்புநெறியே சென்று இன்பத்தை உணர்ந்தவர்க்குத்தான் அவ்விறைவனின் இன்ப உருவமும் தெரியவரும். அதுபோது எல்லாம் இறைவனாகவே தெரியும். திருநாவுக்கரசர் திருவையாறு செல்லும்போது எதிரில் வந்த விலங்குகளும்பறவைகளும் எல்லாம் சிவமாய் அவர் கண்ணுக்குத் தோன்றியது அவரது தேவாரத்தினின்றுமே தெள்ளிதின் விளங்கவில்லையா. அப்பெரியார் யானையின் காலில் இடப்பட்டபோதும், சுண்ணாம்புக்களவாயில் சுடப்பட்டபோதும் கடலில் அழுத்தப்பட்டபோதும் அன்புநெறி பிறழாது, அவ்வாறெல்லாம் செய்து வந்த அரசனையும் அருந்தமிழ்ச்சைவனாக்கி அன்பு நெறியை வளர்த்தவர் அல்லவா?

இனி இந்த உயர்நிலை பெறினும் பழைய பழக்கவழக்கத்தால் அவா சிறிது தலை காட்டினாலும் தலைகாட்டும். பெருங்காயம் இருந்த குடுக்கையல்லவா? அதனை அடியோடு ஆணிவேரற அறுத்து எறியவேண்டும். அதற்காகவே அவாவறுத்தல் ஒன்று கூறுகின்றார்.

> "இன்பம் இடையறா தீண்டும் அவா என்னும்
> துன்பத்துள் துன்பங் கெடின்"

என்று இன்பமே முடிவு என முடிவு கட்டினார். அந்நிலையில் உள்ளாரே அந்தணர். அறவோர் அப்போது தான் செய்யவேண்டியதை செய்தவராகின்றனர். துய்க்கவேண்டியதைத் துய்த்தவராகின்றனர்.

உலகில் உயர்நிலையாய் இருப்பது அன்பேயாகும். துயரத்தில் இருப்பவன் வலிந்து நகைத்துக்கொண்டே இருப்பானானால் சிறிது பொழுதில் மகிழ்ச்சி யடைகின்றான். அவ்வாறே உலகத்தில் அலைபவர்களும் அன்பை வளர்ப்பார்களானால்,

> "அவனே தானே ஆகிய அந்நெறி
> ஏகனாகி இறை பணி"

நிற்பார்கள். இவர்களும் அன்புரு ஆவார்கள் 'சிவமாக்கி எனை யாண்ட அத்தனெனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே" என்று பாடுவர். அது பற்றியல்லவா அன்பே கடவுள் என்றது.

> "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
> அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே."

என்றார் தமிழ்ச் செல்வராகிய திருமூலரும்.

அவாவினை அன்பாக மாற்றும் வழி இதுதான். இரும்பைப் பொன்னாக்குவதுபோல இது ஓர் "இரதவாதம்" ஆனால் இது ஓர் தெய்வீக இரதவாதம். கல்லுங் குப்பையுமாய்க் காடு முரடாய் உள்ள சரக்குக்களைக் கொண்டு வந்து சுண்ணம் இடித்து மையப் பொடியாக்குகின்றவர்கள் இருக்கின்றனர் அன்றோ? அவர்கள் அச்சரக்குக்களை நறுக்கிக் கல்லின்உரலில் இடித்துத் துணியில் சலித்துக் கிண்ணத்தில் தெள்ளி, மிகுதி நின்றவற்றை மறுமுறையும் மறுமுறையும் மடித்து மடித்து நறுக்கி இடித்துச் சலித்துத் தெள்ளிக்கொண்டே போகின்றனர். அதுபோலத் திருவள்ளுவனாரும் அன்பும் அவாவும் கலந்து நின்ற இல்லறத்தாரது ஒழுக்கங்கள் என்னும் கடைச்சரக்கை நறுக்கி இடித்து நன்றாய்ச் சலித்துத் தெள்ளித் தெள்ளிப் போகின்றார். கூடியவரையில் காடுமுரடான அவா எனும் சரக்கெல்லாம் மசிந்து அன்பெனும் திருமணம் வீசும் அழகிய சுண்ணப்பொடியாகின்றன. அவற்றினைக் கைக்கொண்டு திப்பியாய் நின்றவற்றை வெளியில் எறிந்துவிடுகின்றார். அவாவெனும் பழத்திலே உள்ள அன்பெனும் சாற்றைப் பிழிந்து எடுத்துக் கொண்டு கோதை அப்புறம் எறிந்து விடுகின்றார். சாற்றில் கொட்டை கோதில்லாதபடி வடிகட்டி வடிகட்டித் தேட்டையாகத் தெளிய வைக்கின்றார்.

அவாவினை அன்பாக்குவது என்பதனைப் பழந்தமிழர் பழக்க வழக்கத்தில் கொண்டுவந்துவைத்திருந்தனர் என்பதனை விளக்கவே இத்துணையும் இடைப்பிற வரலாக

எடுத்துக் கூறினோம். திருவள்ளுவனார் அரிய ஒழுக்கங்கள் என்னும் அரவின் மணிகளை ஒரு கோவைபட அழகிய மாலையாக அறிந்துணர்ந்து கோத்துள்ளார். அவற்றிடையே பொற்சரடாய் அமைந்து விளங்குவது அன்பேயாகும். இதனால் அன்பு என்பதனை எத்துணை உயர்வாக நமது முன்னோர் கொண்டனர் என்பதும், அன்பையே இறைவன் என்ற சிறந்த உண்மையைக் கண்டனர் என்பதும் அறியலாயினோம். ஆகவே அப்பழந்தமிழர்கள் அத்துணை நூல்களிலும் அன்பினைப் பற்றி எழுதியதன் நோக்கமும் இப்பொழுது எளிதில்விளங்கியது. அன்பைப்பற்றிய நூல்களை--கடவுளிடத்தன்போ, தந்தை தாயிடத்தன்போ, மனைவிமக்களிடத்தன்போ, உலகிடத்தன்போ--எடுத்துவிட்டால் தமிழில் மிகுதியாய் நிற்கும் நூல் எது?

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 19.

நள வெண்பா

(351-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

வந்த நிலவு அனல்போல் தமயந்தியைச் சுட்டதென்று இதன்கீழ் வரும் செய்யுள் கூறுகின்றது.

கூட்டுமை போற்சிறந்த கூரிருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள்—ஈட்டுமணிப்
பூணிலா மென்முலைமேற் போரச் சொரிந்ததே
நீணிலா வென்னு நெருப்பு. 91.

இருளுக்கும் வாடைக்கும் மழைத்தாரைக்கும்தன்னால் தப்பிப்பிழைக்க முடியாதென்று தமயந்தி சோர்வதை அடுத்த செய்யுள் சொல்கின்றது.

அன்னங்கா ணீங்களுமவ் வாதித்தன் றானும்போய்
மன்னும் படியகலா வல்லிரவின்—மின்னும்
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு நாங்கள்
பிழைத்தால்வந் தேனென்னும் பேர். 92.

இவ்வாறு வருந்துகின்ற தமயந்தி தன் தோழிமார்களை ஏசுவதுபோல் நிலவால் வெதும்புகின்ற வருத்தத்தைக் கூறுகின்றாள்.

செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை--இப்பொழுதும்
மீன் பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து. 93.

பதப்பிரிவு:—செப்பு இளம் கொங்கைமீர் திங்கள் சுடர் பட்டு கொப்புளம் கொண்ட குளிர் வானை இப்பொழுதும் மீன் பொதிந்து நின்ற விசும்பு என்பது என்கொலோ தேன் பொதிந்த வாயால் தெரிந்து.

அன்வயம்:—"செப்பு இளம் கொங்கைமீர், திங்கள் சுடர்பட்டுக் கொப்புளம்கொண்ட குளிர்வானை இப்பொழுதும் தெரிந்து தேன்பொதிந்த வாயால், 'மீன் பொதிந்துநின்ற விசும்பு' என்பது என்கொலோ."

பதவுரை.

செப்பு - செப்பைப் போன்றும்
இளம் - இளமையாயும் (இருக்கின்ற)
கொங்கைமீர் - முலைகளையுடைய என் தோழிமார்களே,
திங்கள் - சந்திரனது
சுடர் - நெருப்பு
பட்டு - பட்டு
கொப்புளங் கொண்ட - கொப்புளித்துக் கிடக்கின்ற
குளிர் - நடுங்குகின்ற
வானை - ஆகாசத்தை,
இப்பொழுதும்-நாம்வருந்துகின்ற இக்காலத்திலும்
தெரிந்து - (அவை நக்ஷத்திரங்களல்ல, கொப்புளங்களே என்பதை) தெரிந்திருந்தும் (உங்களது)
தேன் - தேன்போன்ற சொற்கள்
பொதிந்த - தங்கிய
வாயால் - வாயினால்,
"மீன் - நக்ஷத்திரங்கள்
பொதிந்து - அடர்ந்து
நின்ற - இருக்கின்ற
விசும்பு - ஆகாயம்"
என்பது - என்று கூறுவது
என்கொலோ - என்ன காரணமோ.

விளக்கம்:—தமயந்தி தன் தோழிமார்களை என்னவென்று கூப்பிடுகின்றாள்? கொங்கைமீர் - முலைகளை உடையவர்களே. எப்படிப்பட்ட முலைகளை யுடையவர்களே? இளம் கொங்கைமீர் - இளமையான முலைகளை யுடையவர்களே. எதைப் போன்றதும் இளமையானதும் ஆன முலைகளையுடையவர்களே என்றழைக்கின்றாள்? செப்பு இளம் கொங்கைமீர் - செப்பைப் போன்றதும் இளமை பொருந்தியதும் ஆன முலைகளையுடைய மாதர்களே, என்று தமயந்தி தன் தோழிமார்களை அழைக்கின்றாள்.

அவ்வாறு அழைத்து என்ன கேட்கின்றாள்? என்கொலோ - என்ன காரணமோ, என்று கேட்கின்றாள். எதற்கு என்கொலோ? என்பது என்கொலோ - என்று சொல்வது என்ன காரணமோ. எதனால் என்பது? வாயால் - அவர்களது வாயினால். எப்படிப்பட்டவாயால்? பொதிந்த வாயால் - தங்கிய வாயினால். எது பொதிந்த வாயால்? தேன் பொதிந்த வாயால் - தேன் போன்ற இனிய சொற்கள் தங்கிய வாயினால். (தேன், என்பது அவர்களது மொழிக்கு உவமையாகுபெயர்).

தேன் பொதிந்த வாயால் என்ன என்பது என்கொலோ? விசும்பு என்பது - ஆகாயம் என்று சொல்வது. என்ன ஆகாயம் என்பது? பொதிந்து நின்ற விசும்பு என்பது - அடர்ந்திருக்கின்ற ஆகாயம் என்பது. என்ன அடர்ந்திருக்கின்ற ஆகாயம் என்பது? மீன் பொதிந்து நின்ற விசும்பு என்பது - நக்ஷத்திரங்கள் நிறைந்த ஆகாசம் என்பது.

எதனை உங்கள் வாயின் இனிய சொற்களால் நக்ஷத்திரங்கள் நிறைந்த விசும்பு என்பதற்கு என்ன காரணமோ! எனத் தமயந்தி கேட்கின்றாள்? வானை - ஆகாசத்தை. எந்த வானை? குளிர் வானை-நடுங்குகின்ற ஆகாசத்தை. எந்தக் குளிர் வானை? கொப்புளம் கொண்ட குளிர்வானை - கொப்புளித்து நடுங்குகின்ற ஆகாசத்தை. எதனால் கொப்புளம்கொண்ட வான்? பட்டு. எதுபட்டு? சுடர் பட்டு - வெப்பம் பட்டு. எதன் வெப்பம் பட்டு? திங்கள் சுடர் பட்டு - சந்திரனின் நெருப்புச் சுடர் பட்டு.

சந்திரன் சுடக் கொப்புளித்த ஆகாசத்தை, நக்ஷத்திரம் நிறைந்த விசும்பு என்று எவ்வாறு சொல்வதற்கு என்ன காரணமோ? தெரிந்து - தெரிந்திருந்தும். எப்பொழுது தெரிந்திருந்தும்? இப்பொழுது.

விரிவுரை:—விரகதாபத்தால் மதிகலங்கிய தமயந்தி ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களைக் குறித்துத் "தோழிகாள், அங்கு உருண்டை உருண்டையாய் எழுகின்றனவே, அவை யாவை?" என்று கேட்கவும், அத்தோழியர் "இது அறியாயோ தமயந்தி. அவைதாம் நக்ஷத்திரங்கள். ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றுவது உனக்குப் புதுமையாவானேன்?" எனப் பரிகசித்திருப்பர். அதற்குத் தமயந்தி, "இந்நாள்வரையில் இவ்வுத்தரம் பொருத்தமாய் இருந்திருக்கலாம்; ஆனால் இப்பொழுது, சந்திரனின் வெப்பத்தால் நமது உடல் வெந்து கொப்புளம் கொள்வதைக் கண்டு தெரிந்திருந்தும் இப்பொழுது நீங்கள் பழையபடி கூறுவது தகுமோ. சந்திரனது சுடர் பட்டதால் ஆகாயத்தில் கிளம்புகின்ற கொப்புளங்களல்லவோ அவை! இனியசொல் உடையீர், உமக்கிது தெரிந்தும் தெரியாதவர்போல் ஏன் பொய்யுரைக்கின்றீர்", என இடித்துரைப்பதாக இச்செய்யுள் செப்புகின்றது.

ஆரணிய காண்டத்தின்கண் அயோமுகிப் படலத்தில் சீதையைப் பிரிந்த இராமன் இவ்விதமே கூறி வருந்துவதை இங்கு ஒப்புநோக்கலாம்:—

அப்புடை யலங்குமீ னமரு மார்கலி
உப்புடை யிந்துவெந் துதித்த வூழித்தீ
வெப்புடை விரிகதிர் விரிப்ப மெய்யெலாம்
கொப்புளங் கொண்டதோ கொதிக்கும் வானமே.

இராமனுக்குச் சந்தேகமாயிருந்தது தமயந்திக்கு நிச்சயமாயிற்று.

குறிப்பு:—தமிழிலக்கணத்தில் சொற்கள் நான்கு விதப்படும். அவை, பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்பன. எழுத்துக்கள், தீ பூ வா போ என்பனபோல் தனியாக நின்றாவது, புலி காடி பேசினான், என்பனபோல் இரண்டும் மூன்றும் நான்கும் அதற்கு மேற்பட்ட எழுத்துக்களும் தொடர்ந்தாவது பொருள் தருமானால் அப்பொழுது சொல் அல்லது பதம் ஆகும், என்று முன்னமே கூறியுள்ளேன். (205 வது பக்கம்.) ஓரெழுத்துத் தனியாக நின்று அர்த்தம் தரும்போது அதற்கு ஓரெழுத்து ஒருமொழி என்று பெயர். ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து அர்த்தம் தருகின்றபோது அப்பதத்திற்கு எழுத்துத் தொடர்மொழி என்று பெயர்.

சொல் என்ற ஒன்று இருந்தால் அதற்கு அர்த்தம் இருக்கவேண்டும். இராமன் பட்டிணம் காலை கிளி அழகு பேச்சு, போன்று ஒன்றின் பெயரைச் சொல்லுமானால் அந்தச் சொல் பெயர்ச்சொல் (190-வது பக்கம்). அல்லது, வா நின்றான் போவேன் பார்க்க அடித்து, என்று ஒரு தொழிலைச் செய்வதைப்பற்றிச் சொல்லுமானால் அந்தச் சொல் வினைச்சொல். பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் தமக்கென்ற ஒரு அர்த்தத்தை உடையன. ஆனால் தமிழ் இலக்கணத்தில் இடைச்சொல் என்ற ஒருவகைச் சொற்கள் இருக்கின்றன. கு த் ஒ ஒடு உம் அன் மன் அர் இன் கொல், இவைகள் இடைச்சொல்லிற்கு உதாரணங்கள். இவைகளுக்குப் பொருள் உண்டு. ஆதலால் அவை பதங்கள். ஆனால் பெயர் வினைச் சொற்களுக்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசமென்றால், பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தனியாக நின்றாலும் தமக்கென ஒரு பொருள் உடையன. (குதிரை என்னும் பெயர்ச்சொல்லும், தூங்கினான் என்ற வினைச்சொல்லும் சுயமாக ஒரு பொருளைத் தெரிவிக்க வில்லையா.) இடைச் சொல்லிற்குத் தான் மாத்திரம் நின்று ஒரு பொருளை உணர்த்துகின்ற சக்தியில்லை. அவை பெயர்ச் சொல்லோடாவது வினைச் சொல்லோடாவது சேர்ந்தே ஒரு பொருள் கொடுக்கும். இதற்குத் தனிஇடம் கிடையாது. பெயர்ச்சொல் வினைச்சொல் இவைகளின் அகத்திலாவது புறத்திலாவது தங்கித் தமக்கு இடமாகக் கொள்கின்றபடியால் இவைகளுக்கு இடைச் சொல் என்ற பெயர் வந்தது. இடை என்றால் நடுவு என்ற பொருள் மாத்திரமல்ல, இடம் என்ற அர்த்தமுமுண்டு. "அவ்விடை ஓடினான்" என்ற வாக்கியம், "அந்த இடத்திற்கு ஓடினான்" எனப் பொருள்படும்.

அனேக இடைச்சொற்கள் தமிழில் இருக்கின்றன. அவை பெயர்ச்சொல் வினைச்சொற்களோடு சேர்ந்து பல விதமான பொருள்களைத் தரும். ஓ என்பது ஒரு இடைச்சொல். அது பதங்களோடு சேர்ந்து எத்தனைவித பொருள்களைத் தருகின்றது பாருங்கள்.

"உனக்கு மகன் உண்டோ":—இது ஒரு விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு உதவிசெய்து வினாப் பொருளில் வந்தது.

"உனக்குச் சம்பளம் தூங்குவதற்கோ கொடுக்கின்றேன்":—என்று கேட்டால், தூங்குவதற்கல்ல, "வேலை செய்வதற்கு" என, வாக்கியத்தில் இல்லாத சில சொற்களை ஓ என்பது காட்டி நிற்கின்றது. வாக்கியத்தில் இல்லாது ஒழிந்த சொற்களை அது இசைப்பதால், இது ஒழியிசைப் பொருள்.

"இது பொன்னோ பித்தளையோ":—என்ற இடத்தில் ஓ என்பது சேர்ந்து ஐயப்பொருள் (சந்தேகம்) தந்தது.

"இக்காரியம் ஓஓ புண்ணியம்":—என்ற இடத்தில் புண்ணியத்தின் சிறப்பைக் காட்டுவதால் ஓ சிறப்புப் பொருளில் வந்தது. அப்படியே, "ஓ ஓ பாதகன்" என்றால் இழிவுப் பொருளைக் காட்டும்.

"அரிச்சந்திரனோ பொய் சொல்வான்" அல்லது "அரிச்சந்திரன் பொய்சொல்வானோ":—என்ற இடத்தில் ஓ என்பது வினாவுமல்ல ஐயமும் அல்ல. அவன் பொய் சொல்லமாட்டான் என்று மறுக்கின்றபடியால் ஓ இங்கு எதிர்மறைப் பொருளில் வந்தது.

இப்படி இன்னும் பலபொருள்களும் இதற்குண்டு. அவ்விதமே, ஏ உம் போன்ற இடைச்சொற்களும் பல பொருள்களைத் தருவதற்கு உதாரணங்கள் அமைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இடைச்சொல்லிற்குத் தனியான பொருள் இல்லையென்றும் மற்றச் சொற்களோடுகூடிப் பொருள்களை விளைவிக்கும் என்றும் சொன்னேன். ஆனால் செய்யுள்களில் சிலசமயம் ஒரு பொருளுமே கொடுக்காமல் இடைச்சொற்கள் வருவதுண்டு. அப்படிப் பொருளே இல்லாமல் வருகின்ற இடைச்சொல்லிற்கு அசைநிலை என்று பெயர்.

கொல், என்பது ஒரு இடைச்சொல். உயிரைப் போக்குகின்ற தொழிலைக்குறித்து வருமானால் அப்பொழுது வினைச்சொல். 'இந்தப் பாம்பைக் கொல்,' என்றபோது கொல் வினைச்சொல். ஆனால் இந்தச் செய்யுளில் என் கொலோ, என வந்திருக்கு மிடத்தில், என் +

கொல் + ஓ. எனப் பிரித்து கோல் என்பதும் ஓ என்பதும் இடைச்சொற்கள் ஆகின்றன. அவைகளில் ஓ என்பது வினைப் பொருளில் சிறிது எதிர்மறையும் கலந்து வந்திருக்கின்றது. கொல் என்றதற்கு இங்கு எவ்விதப் பொருளுமில்லை. ஆகையால் அசைநிலை. ஆனல் கொல் என்பதற்குச் சில சமயங்களில் வினைப் பொருளும் சில சமயங்களில் ஐயப் பொருளும் உண்டு. "நாளை நீ வருவாய்கொல்," என்ற வாக்கியத்தில் கொல் என்பது ஓ என்பதற்குப் பதிலாய் வினைப் பொருளில் வந்திருக்கின்றது. "அங்குக் காண்பது கயிறுகொல், அரவுகொல்," என்ற வாக்கியத்தில் கயிறோ பாம்போ என்ற சந்தேகத்தைக் குறித்து ஐயப் பொருளில் கோல் என்னும் இடைச்சொல் வந்திருக்கின்றது. முன் இவ்வனவிற் செல்லுங்கொல், இவ்வனவிற் காணுங்கொல், என்று 29-வது செய்யுளில் (166-வது பக்கம்) வந்திருக்கின்ற கோல் என்னும் இடைச் சொற்கள் ஐயப்பொருள் உடையன.

காணுந் தடங்காவுங் காமன் படைவீடு
வானுந் தேர்வீதி மறிகடலும்—மீனக்
கொடியாடை வையமெல்லாங் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய். 94.

பதப்பிரிவு:—கானும் தடம் காஉம் காமன் படை வீடு வானும் தேர் வீதி மறி கடலும் மீன கொடி ஆடை வையம் எல்லாம் கோதண்ட சாலை பொடி ஆடி கொன்றது எல்லாம் பொய்.

பதவுரை.

கானும் - காடும்
தடம் - குளங்களும்
காஉம் - சோலைகளும்
காமன் - மன்மதனுடைய (புஷ்பங்களாகிய)
படை - ஆயுதங்கள் வைக்கின்ற
வீடு - வீடுகளாகும்.
வானும் - ஆகாயமும்
தேர் - (காற்றாகிய அவன்) தேர் ஓடும்
வீதி - வீதியாகும்.
மறி - (அலைகள்) புரள்கின்ற
கடலும் - சமுத்திரமும்
மீன - மீன்களையுடைய (அவனது)
கொடி ஆடை - கொடித்துணி.
வையம் - பூலோகம்
எல்லாம் - முழுவதும்
கோதண்டம் - (அவன்) வில்வித்தை பழகுகின்ற
சாலை - இடம். (ஆகையால்)
பொடி - சாம்பலை
ஆடி - பூசிக்கொண் டிருக்கின்ற சிவபிரான்
கொன்றது - அவனைக் கொன்றுவிட்டான் என்று சொல்வது
எல்லாம் - முழுவதும்
பொய் - பொய்யே.

விரிவுரை:—இந்தச் செய்யுளில் தமயந்தி மன்மதனைப் பழிக்கின்றாள். பரமசிவன் நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்துக் கொன்றுவிட்டார் என்பது யாவரும் அறிந்தது. ஆனல் இந்நாள் மன்மதன் தன்னைப் படுத்திவைக்கின்ற கஷ்டத்திலிருந்து அவன் செத்துவிட்டான் என்று எப்படிச் சொல்வது, என்று தமயந்தி வருந்திச் சிவபிரான் அவனைக் கொன்றனன் என்னும் வதந்தியை மறுக்கின்றாள். அது மாத்திரமல்ல, மன்மதன் இன்னும் இருக்கின்றான் என்பதைக் காட்டுகின்ற அடையாளங்களும் நிகழ்கின்றனவாதலால் அவன் செத்ததில்லை என்று பின்னுஞ் சாதிக்க அவளுக்கு இடம் ஏற்படுகின்றது.

இந்தச் செய்யுளின் பொருள் விளங்குவதற்கு மன்மதனைச் சார்ந்த சில விஷயங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மன்மதன் உருவு இல்லாதவன். அவனது வில் கரும்பு. அவனுக்கு அம்புகள் ஐந்து. அவையும் மலர்களே. அம்மலர்கள்;—முல்லை தாமரை நீலோற்பலம் மா அசோகு, ஆவன. அவன் வில்லிற்கு நாண் வண்டுகள். (இவைகளைக் கரும்புவில் சுரும்புநாண் அரம்புக் கணை என ஞாபகம் வைத்துக்கொள்ளலாம்). அவனுடைய தேர் தென்றல்காற்று. கிளியே குதிரைகள். வாளும் தாழம்பூ. அவனுக்குரிய கொடி மீனக்கொடி. அவனது குடை சந்திரன். அவனுடைய சேனை மாதர்கள். மன்மதனல் எதிர்க்கப்படாதவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லையாகையால் பூலோகம் முழுவதுமே அவன் போர்செய்கின்ற இடமாகின்றது.

இவைகளுள் சில இருப்பதாகக் காட்டி மன்மதன் இறந்தனன் என்பதை மறுக்கின்றாள். எவ்வாறெனில்:—காடும் குளமும் சோலையும் இருக்கின்றவரையில் அவனுடைய ஆயுதச்சாலையும் இருக்கின்றது. ஆயுதச்சாலை என்பது போர்க்குரிய அம்பு முதலானவை வைத்திருக்குமிடம். அவனுடைய அம்பு ஐந்து மலர்கள். அவ்வைந்துமலர்களில், காட்டில் இருப்பது முல்லை, குளத்தில் இருப்பன தாமரையும் நீலோற்பலமும், சோலையில் இருப்பன மாம்பூவும் அசோகும்.

அவனுடைய தேர் ஆகிய காற்று ஓடுகின்ற வீதியாகிய வானமும் இருக்கின்றது. மீன் எழுதிய அவனுடைய கொடிச்சீலையேபோல் மீன்கள் நிறைந்த கடல் ஆடிக்கொண்டிருக்கின்றது. அவன் வில்வித்தை பயில்கின்ற இடமாகிய உலகம் இருக்கவே இருக்கின்றது. ஆதலால் அவன் சாதவில்லை என்பது அவள் கொள்கை.

காமநோய் அடைந்தவர் தென்றல்காற்றுப் பட்டால் பொறுக்கமாட்டார். அதுவும் அக்காற்றுக் குளங்களிலிருந்தும் சோலையிலிருந்தும் குளிர்ந்து வீசினல் பெரிதும் கஷ்டப்படுவர். மலர்களின் வாசனையும் கலந்து அக்காற்று வீசுமானல் அவர்களுக்கு வேதனை பின்னும் அதிகமாகும். ஆதலாற்றான் மலர்கள் இருப்பதும் குளிர்ச்சி தருவதுமாகிய காட்டையும் குளத்தையும் சோலையையும் இவள், மலர்கள் இருக்கின்ற காரணத்தால் படைவீடாக அமைந்ததற்கு மாத்திரமல்லாமல், தென்றலின் கொடுமையை அதிகமாக்குவதற்காகவும் அவைகளைச் சிறப்பாய் எடுத்துச் சொல்லிப் பழிக்கின்றாள். இப்படியே சீதையும்,

"கயங்க ளென்னுங் கனறேய்ந்து
கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவேள்
எய்த புண்ணி னிடைநுழைய......"

என்று தன் ஆற்றாமையைச் சொல்லிப் புலம்பக் கம்பராமாயணத்தில் காணலாம்.

"செப்பிளங் கொங்கைமீர்" எனத் தொடங்கும் முன் செய்யுள் தமயந்தி சந்திரனல் வருந்தினள் என்பதைக் காட்டுகின்றது. இச்செய்யுள் தென்றல் காற்றினலும் கடலின் ஒலியாலும் மன்மதனது செய்கையாலும் வருந்தினள் என்பதைக் காட்டுகின்றது. ஒரு விஷயத்தை எளிதாகக் கூறிவிடாமல் சாமர்த்தியமாய்க் கேட்போர் வியந்து மகிழும்படி கூறுவது அணி அல்லது அலங்காரம் என்று முன்னே கூறியுள்ளேன். உவமை அணி, உருவக அணி, ஒழித்துக் காட்டணி, உயர்வு நவிற்சியணி, தற்குறிப் பேற்றவணி முதலிய அணிகளைப்பற்றிக் கற்றதை மறந்திருப்பீர்களானல் மறுபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

இவ்விரு செய்யுள்களிலும் அமைந்திருக்கின்ற அணி, ஒழிப்பணி. இதன் இலக்கணம், உண்மையான ஒன்றை மறுத்து ஒழித்து 'அதுவல்ல என்றுவது' வேறு ஒன்று என்றுவது, சாமர்த்தியமாய்ச் சொல்வதாம். உண்மையான ஒன்றை ஒழித்து விடுவதால் இதற்கு ஒழிப்பு அணி, என்னும் பேர் வந்தது.

முன்செய்யுளில், வானத்தில் தோன்றுவன நக்ஷத்திரங்கள் என்பன உண்மையாயிருந்தும் அதை ஒழித்துக் கொப்புளங்கள், என்று வேறு ஒன்றாகக் கூறியபடியால் அது ஒழிப்பணி. இச்செய்யுளில் சிவபிரான் காமனைக் கொன்றது நிச்சயமாயிருந்தும் அதை ஒழித்து அவன் சாகவில்லை என்று சாதிப்பதால் இதுவும் ஒழிப்பணி. வந்த இடத்தில் இவ்வணியைத் தெரிந்துகொள்வது வெகு சுலபம். இந்த அணிக்கு அவனுதியணி என்ற பேரும் உண்டு.

நைடதத்தில், தமயந்தியை நளனிடத்திலே வர்ணிக்கின்ற அன்னம் இந்த ஒழிப்பணியைக் கையாள்கின்றது. அதன் கருத்துப் பின்வருமாறு:—"சந்திரனிடையிலே கருமையாய்த் தோன்றுவதை அதன் களங்கம் என்றல்லவோ இன்னமும் இவ்வுலகத்தார் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அது தவறு. தமயந்தியின் முகத்தை அமைப்பதற்காகப் பிரமன் சந்திரனிலிருந்து வழித்து வழித்து எடுத்துவிடவே அந்தத் துவாரத்தின் வழியாய்ப் பின் இருக்கும் ஆகாயம் நம் கண்களுக்குத் தென்பட, அதைப் பார்த்துச் சந்திரனில் படிந்திருக்கும் மாசு என்று நினைத்துக் கொள்கிறோம்."

சந்திரனின் களங்கம் உண்மையாயிருக்க அதை மறுத்தொழித்து வேறு ஒன்று என்று கூறுவதால் இது ஒழிப்பணி யாயிற்று.

189002

வானசாஸ்திரம்

சூரியன்.

சூரிய கிரகக்கூட்டத்தில் முக்கிய அங்கமாயிருப்பது சூரியனே. பூமியையும் மற்றைய கிரகங்களையும் தத்தம் நிலை வழுவாது இருந்துவரச் செய்வது மாத்திரமன்றி ஒளியையும் காங்கையையும் கொடுத்துச் சீவகோடிகளை எல்லாம் உய்விப்பதும் சூரியனே. ஒளியும் காங்கையும் சூரியனிடத்திலிருந்து வாராவிடின் உலகத்தில் உள்ள பிராணிகள் எல்லாம் அற்றுப்போகும்.

சூரிய வெளிச்சம் மிகவும் பிரகாசமான வெண்மையான ஒளி. அது மற்றெல்லா ஒளிகளையும் மழுங்கச்செய்கின்றது. இதனல்தான் வானிலுள்ள நக்ஷத்திரங்கள் சந்திரன் முதலியவைகள் பகலில் நம் கண்ணுக்குத் தோற்றப்படுகிறதில்லை. உலகத்தில் உள்ள பலவகையான வெளிச்சங்களையும் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு அளவை கணித்திருக்கிறார்கள். உதாரணமாக, மின்சார விளக்குகள் செய்வோர் அது எவ்வளவு வெளிச்சம் கொடுக்கிறதென்பதை அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருமெழுகுவர்த்தி கொடுக்கும் ஒளியை அளவையாய் வைத்து மற்றெல்லா ஒளிகளையும் அளவெடுக்கிறார்கள். அதுபோலச் சூரியவெளிச்சத்தை அளவெடுக்க முடியாது. சூரியனிலிருந்து 92,900,000 மைல் தூரத்திலிருக்கும் பூமியில் படும் வெளிச்சம் அளவெடுக்க முடியாத பிரகாசமாயிருக்கிறது. சூரியனுக்குச் சமீபத்தில் அதன் பிரகாசம் எவ்வளவினதா யிருக்கவேண்டு மென்பதை யூகித்துக் கொள்ளவேண்டியதுதான்.

சூரியனுடைய ஒளி வெண்மை என்று சொன்னோம். ஆனல் வெவ்வேறு நிறங்களுள்ள ஒளிக்கதிர்கள் சேர்ந்து வெள்ளொளியாய்த் தோற்றுகிறது. ஒளிக்கிரணங்கள் கண்ணாடிக்கு ஊடாக அல்லது நீருக்கு ஊடாகச் செல்லும்போது வழி விலகிச்செல்கின்றன வென்று சொன்னோம். இவ்விதம் வழிவிலகும்போது வெள்ளொளியிலுள்ள தனித்தனிக் கதிர்கள் பிரிந்து செல்கின்றன. இவ்விதம் கதிர்கள் பிரிந்து செல்வதனல் வானவில் தோற்றுகின்றது. மழைத்துளிகளூடாகச் சூரியனுடைய ஒளி செல்லும்போது தனிக்கதிர்கள் பிரிந்து பலவேறு வகைப்பட்டதான நிறங்கள் தோன்றுகின்றன. முக்கோணமான கண்ணாடிக்கு ஊடாக பொருள்களைப்பார்க்கும்போதும் அப்பொருள்கள் வானவில்லிலுள்ள நிறமுடையவைகளா யிருக்கின்றன. இந்த விதமான கண்ணாடிக்கு ஆங்கிலத்தில் ப்ரிஸம் (Prism) என்று பெயர். இந்தவிதமான சோதனைகளிலிருந்து சூரிய வெளிச்சம் எழுநிறக்கதிர்கள் சேர்ந்து வெள்ளொளியாய்த் தோற்றுகிறதென்பது தெரியலாம். இவ்வேழு கதிர்களும் முறையே நீலம் ஊதா பச்சை மஞ்சள் சிவப்பு நிறமுள்ளவைகள். இவ்விதமாக ஒளிபிரிந்து தனித்தனிக்கதிராக தோன்றுவதற்குஸ்பெக்ட்ரம் (Spectrum) என்றுபெயர் ஒளிகளின் கதிர்களைப் பிரித்துப் பரிசோதனை செய்தற்கு ஸ்பெக்ட்ரஸ்கோப் என்னும் கருவி ஒன்றுஉண்டு. இதன் மூலமாக ஒளிகளைப் பரிசோதனை செய்து பார்த்தால் சூரிய வெளிச்சத்தில் மேலே சொல்லப்பட்ட எழு கதிர்களும் இருக்கின்றன வென்பதும் மற்றும் வேறு சில ஒளிகளுக்கு இந்தக்கதிர்களில் சில இல்லை என்பதும் விளங்கும். இதற்குக் காரணம், ஒளிகள் பிறக்குமிடத்தில் தங்கியிருக்கும் தாது பொருள்களின் (elements) வித்தியாசமே. உதாரணமாக எரியும் சுடர் ஒன்றில் சாதாரண கறிஉப்பைக் கொஞ்சம் எடுத்து வைத்தால் அது உடனே அந்தச் சுடரை மஞ்சள் நிறமாக மாற்றி விடுகிறது. இந்தச் சுடரிலிருந்து தோன்றும் ஒளியை ஒளிப் பரிசோதனைக் கருவியினல் பார்த்தால் அது முக்கியமாய் மஞ்சள் நிறமுள்ள கதிர்கள் உள்ள ஒளியாய்க் காணப்படுகின்றது. மற்றக் கதிர்கள் அற்றுப்போயோ அல்லது மழுங்கியோ போய்விடுகின்றன. இதிலிருந்து ஒவ்வொரு தாதுப்பொருட்களும் ஆவியாய் மாறிப் பாவும்போது வேறு வேறு பிரத்தியேகமான நிறமுள்ள கதிர்களைத் தோற்றுவிக்கின்றன வென்று தெரியும். இந்த ஒளிப்பரிசோதனைக் கருவி மூலமாக மற்றைய அண்டங்களிலுள்ள பொருள்களின் தன்மையைப்பற்றி அனேக உண்மைகள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சூரியனிலுள்ள தாதுப் பொருள்கள் பூமியிலுள்ளவைகளே என்பது இதன் மூலமா யறிந்ததொன்று. இதுபோலவே மற்ற அண்டங்களும் பூமி கொண்டிருக்கும் தாதுப் பொருள்களையே கொண்டிருக்கின்றன வென்றும் இந்த ஒளிப் பரிசோதனைக் கருவி மூலமா யறியலாகும். வானசாஸ்திர ஆராய்ச்சி வளர்ச்சிக்கு இக்கருவி செய்யும் உதவி சிறியதன்று. சூரியனிடம் இருந்து ஒளிக்கிரணங்கள் மாத்திரமன்றிக் காங்கைக்கிரணங்களும், இது இரண்டுமல்லாத வேறுகதிர்களும் உற்பத்தியாகின்றன. ஒளிக்கதிர்கள் நமது கட்புலனல் அறிந்துகொள்ளத் தக்கவைகள். காங்கைக் கதிர்கள் நமது மெய்ப்புலனல் தெரிந்துகொள்ளுகின்றவை. நமது புலன்களால் தெரிந்துகொள்ள முடியாத

சிலகதிர்கள் உண்டு. இவைகளைப்பற்றிய ஆராய்ச்சி இன்னும் நடந்துகொண்டே யிருக்கின்றது. இவைகளிற் சிலவற்றைப்பற்றிய தன்மைகளும் அவைகளுடைய உபயோகங்களும் சாஸ்திர ஆராய்ச்சியால் நமக்கு எட்டியிருக்கிறது. இப்பொழுது எக்ஸ்ரே (Xray) என்று சொல்லப்படுவது நமது கட்புலனுக்கு எட்டாத கதிர்களில் ஒன்று. இதன்மூலமாகச் சாதாரண ஒளி ஊடுருவிச் செல்லமுடியாத பொருள்களுக் கிடையிலிருக்கும் இன்னொரு பொருளைப் புகைப்படம் பிடிக்க முடிகிறது. இதைத் துணையாகக்கொண்டு நமது உடம்பினுள்ளிருக்கின்ற எலும்பு இரத்தாசயம் சுவாசப்பை முதலிய அவயவங்களின் நிலைமையை அறிய முடிகின்றது. இதைத் தவிர புகைப்படம் பிடிப்பதற்கு உதவியாய் இருப்பதும் நமது கட்புலனுக்கு எட்டாத சில கதிர்களே என்பதும் இப்போது சந்தேகமற ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. தற்கால வைத்திய சாஸ்திர நிபுணர் அனேகர் இக்கதிர்களுக்கு வியாதிகளைக் குணமாக்குந் தன்மை உண்டென்றும் ஆதலால் சூரிய வெளிச்சத்தில் முற்றாய்த் தோய்ந்து வருபவனுக்கு நோய் உண்டாகாதென்றும் வற்புறுத்துகின்றார்கள்.

சூரியனுடைய காங்கை இவ்வளவென்று கணக்கிட முடியாது. காங்கையை நாம் காங்கையறி கருவியினால் (Thermometer) அளந்து அறிகிறோம். நூறு டிகிரி சூடு தண்ணீரை ஆவியாய் மாற்றுகிறது. இன்னும் அதிக சூடு இரும்பை உருகச்செய்கிறது. தற்காலம் நாம் பிறப்பிக்கக்கூடிய மிக அதிகமான சூடு மின்சார உலைகளின மூலமாகவே. இதுவும்3000டிகிரிக்குள்தான் இருக்கிறது. சூரியனுடைய சூடு இதற்கும் எவ்வளவோ மேலிருக்கவேண்டும். இதை அளவெடுக்க முடியாது. ஆனால் அச்சூட்டின் அளவை ஒரு வகையாய்க் கணித்திருக்கிறார்கள். அதாவது 4000 அடி ($\frac{3}{4}$மைல்) கனமுள்ள பனிக்கட்டியினால் சூரியனைச் சுற்றி மூடினால் அந்தப் பனிக்கட்டி எல்லாம் ஒரு மணி நேரத்துக்குள் கரைந்துபோய் விடும்.

இது நிற்க. சூரியன் ஒளியும் காங்கையும் தருவதிலிருந்து எரிந்துகொண்டிருக்கிற ஒரு அண்டமென்பது தெரிகிறது. மேலும், இப்பூமியில் படும் ஒளியும் காங்கையும் சூரியனிடத்திலிருந்து புறப்படுகிறதின் மிகவும் சிறிய வோர் பாகம். எல்லாக் கிரகங்களிலும் படுகிற சூரிய காங்கை அதனிடத்திலிருந்து வெளிச் செல்லும் காங்கையினது பத்துக் கோடியில் ஒரு பாகமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். எஞ்சியது ஆகாய வெளியில் பரவிச் செல்லுகின்றது. இவ்வளவு ஏராளமான காங்கை வெளிச் செல்வதனால் நாளடைவில் சூரியனுடைய வெப்பம் தணிந்துகொண்டு வருகிறதா அல்லவா வென்னும் கேள்வி அனேகர் மனதில் தோன்றலாம். இதற்குப் பல விதமாக சாஸ்திர நிபுணர்கள் பதில் அளிக்கிறார்கள். காங்கை வெளியே சென்று கொண்டிருக்கும் ஒரு எரிகோளமாய் மாத்திரம் சூரியன் இருந்து இப்போது வெளியேறுகிறவீதம் காங்கை சென்று கொண்டிருக்குமானால் 3000 வருஷத்தில் சூரிய வெப்பம் தணிந்து போகவேண்டும். அப்படியில்லாமல் என்றும் ஒரே வெப்பமாய் இருக்கிறபடியால் அவ்விதம் இல்லாமல் குறைந்து வரும் வெப்பத்தை மீட்டும் பழையபடி சரிப்படுத்துகின்ற தன்மை சூரியனிடத்தில் இருக்கவேண்டுமென்பது கொள்கை. இது எவ்விதம் முற்றுப்பெறுகிறதென்பதைப் பற்றிய விசாரணைகளில் முக்கியமானது ஹெம்ஹோல்டஸ் (Helmholtez) என்பார் விளக்கப்படுத்திய கொள்கையே. இதன்படி சூரியனுடைய மேற்பாகம் சுருங்குவதனால் உண்டாகும் சூடு வெளிச்செல்லும் சூட்டைச் சமப்படுத்துகிறது. அவர் வருஷத்துக்கு 100அடி சூரியன் உட்சுருங்கினால் இதற்குப் போதுமென்று ஸ்தாபித்தார். ஆனால் இவருக்குப்பின், இந்தச்சுருங்குதல் 180 அடி இருக்கவேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கையின்படி சூரியன் ஒரு காலத்தில் மேற்சுருங்க முடியாதபடி தடித்துப் போகவேண்டி வரும். அப்போது வெளிச்செல்லும் சூட்டைச்சமப்படுத்த வேறு வழி யில்லாமையால் சூரிய வெப்பம் தணிந்துகொண்டே வரவேண்டும். அவ்விதம் இக்கொள்கைப்படி சுருங்க முடியாத நிலைமைக்குச் சூரியன் வருவதற்கு 1 கோடி வருஷம் செல்லுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி.

அதன் முறைகளும் சில கருவிகளும்.

புனைந்துரை.

இலக்கிய வேற்ற ஆராய்ச்சிநூல்கள் ஆங்கிலேய முதலிய மேல்நாட்டுப் பாஷைகளிலும் நூதனமானவை. பத்தொன்பதாம் நூற்றாண்டில், மாத்தியு ஆர்னால்ட் (Matthew Arnold) முதலானோர் இலக்கியவேற்ற ஆராய்ச்சி வியாசங்கள் எழுதிய பின்னரே அத்தகைய கல்வி, இலக்கியத்தில் ஒரு கிளையாய்ப் பிரியலாயிற்று. நமக்கோ அக்காலம் வர எக்காலமாமோ! ஆங்கிலத்தில் வான் (Vaughan) என்பவர் தனது இலக்கியவேற்ற ஆராய்ச்சிநூலில்கண்ட முறைகளுக்கும் கருவிகளுக்கும் மூதாதைகள் என மொழியத்தகுந்த முறைகளும் கருவிகளும், தமிழ்ப் பாடையில் குறைவற இருந்தும் அவற்றை மேல்நாட்டின் உடைபோர்த்துக் கண்ணுக்கு இன்பக் காட்சியாய்க் காட்டுவோரின்மையால், "அத்தகைய உளவோ?" என்றும் ஆங்கிலேயக் கல்வியாளர் எண்ணுகின்றனர். இரத்தினங்கள் நம்முடைய தமிழில் இராசி இராசியாய்க் குவிந்திருக்கின்றன. எவ்வித நகைகளும் செய்யக்கூடும். ஆனால் அவற்றினின்று வேண்டும் நகையுருவம் ஏற்படுத்தும் கம்மியன் வெளிவரும் வரையில் அந்நகை முடியாத காரியம் என்றே யாவரும் பகர்வர். செய்தபின்னர், விடயம் நூதனமா யிராவிடினும், உருவமாகிலும் நூதனமாய்த் தோற்றுமன்றோ?

பின்னர்க் கண்டுள்ள அட்டவணையில் காட்டியுள்ள நூல்களினின்று மனம்போனவாறு விடயங்களைச் சில முறைகளென்றும், சில கருவிகளென்றும் இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியில் எடுத்துப்போட்டு ஒவ்வொன்றுக்கும் பற்பல கூறாய் யான் வகுக்கலானேன். இந்நூற்கள் யாவும் இருபகுதியாயடங்கும். அவைகளை இலக்கண நூல்களென்றும், இலக்கிய நூல்களென்றும் வகுப்போமாக. இலக்கண நூல்களும்(நன்கு ஆராய்ந்துநோக்கின் அவையும்) ஒருவித இலக்கியமே. மேல்நாட்டாரின் நூற்பகுதியை அனுசரித்து இலக்கியம் இலக்கணம் என யானும் பிரிக்கலாயினேன். இவ்வித வகுப்புக்களில், இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியின் முறைகள் இலக்கண நூல்களிலும், கருவிகள் இலக்கிய நூல்களிற் சிற்சில இடங்களிலும்,

காணக்கூடியனவா யிருக்கின்றன. அவை யாவையும் தொகுத்துச்சுட்டி வகுத்துக்காட்டல், இவ்வெளிய வியாசத்தின் கருத்தாம். இது முதல்முயற்சி யாதலால் பிழைகள் நடையிலும், உடையிலும், சொல்லிலும், சொற்றொடரிலும், பொருளிலும், அமைவிலும் நேருமென்றே நம்புகின்றேன். ஆயினும் யாதொரு உருவும் பெறாதிருக்கும் இதற்கு அர்தமற்ற உருவெனும் விஸ்வாமித்ர சிருட்டியெனக் கொடுப்பின் பிறகு பணிகள் முதலிய சீர்திருத்தங்களால் பான்மை நன்றாகுமென நம்பி இதை எழுதலாயினேன்.

இவ்வியாசத்தின் இனிய பாகங்கள் யாவையும் ஆங்காங்கு அடியிற்கண்ட சிறந்த தமிழ் நூல்களில் இருந்து பொருக்கியவையே யாம். இதிலுள்ள இன்னாதன யாவும் எனக்கே சொந்தமென்று அங்கீகரிக்க உரிமை கொண்டேன்.

1. மேல்நாட்டு இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியும் அதன் பண்பும்.

மேல்நாட்டு இலக்கியவேற்ற ஆராய்ச்சி, கொஞ்சம் கொஞ்சமாய் உற்பத்தியாய் வளர்ந்து வந்ததே யொழிய, நமது பயிர்போல் ஒழுங்காய் விதைபோட்டு முளைத்ததன்று. முதலில், இலக்கியவேற்ற ஆராய்ச்சி என்பதே வகுப்புப் பிரிக்கும் தொழிலென்று எண்ணப்பட்டது. இது முதல்தரம் நூல், இது இரண்டாம்தரம் நூல், இது மூன்றாம்தரம் நூல், என்று கூறுகூறாய் இலக்கியத்தைச் செய்து குவிக்கலாயினர். இது வொழுங்கன்று எனப் பதினெட்டாம் நூற்றாண்டிலுள்ள ஓர் கவி டிரைடன் (Dryden)என்பவர் தாரதரம் பார்த்துப் பிரிக்கவேண்டுமென்றும், ஒன்றுடன் ஒன்றை ஒத்திட்டுப்பார்த்துப் பிரிக்கவேண்டுமென்றும், குற்றமற்ற கவிவாணவர்களுடைய நூல்களையே அளவைக்கு ஆதாரமாகக்கொண்டுஅவற்றின் வழி மற்றைய நூல்களுக்கு ஒழுங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் பகரலாயினர். இவருக்குப் பின் வந்த போப் (Pope) என்பார் இவ்வித ஆராய்ச்சியை வசையுடை போர்த்து (Satire) அவ்வாராய்ச்சியை முற்றும் பழுதாக்கினர். மாத்தியு ஆர்னால்ட் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கிய வேற்ற ஆராய்ச்சி விடயமாகப் பல வியாசங்கள் எழுதினர். அவர் பிரான்சுக்காரர் கல்விச் சங்கத்தைப் பற்றியும் மற்றுமுள்ள பற்பல ஐரோப்பிய தேச பாடை நடைகளைப் பற்றியும் உதாரணங்கள் பலவாறு எடுத்துக் காட்டினர். ஆயினும் இலக்கண ஏற்ற ஆராய்ச்சியின் திட்பநுட்பம் பெற்ற விதிகள் அவர் கூறவில்லை. பின்வந்தவர்கள் இலக்கிய நடையின் அழகு கல்விநூல்களில் மாத்திரமன்று, ஓவியம், சிற்பம் முதலிய கலைகளிலும் கண்டறியவேண்டுமென்று கூறலானர். இத்தகைய ஆராய்ச்சியின் சரித்திரத்தை ஒருவாறு தொகுத்து வான் (Vaughan) என்னும் நாமமுடையார் 'ஆங்கிலேய இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி' என்னும் நூல் எழுதி அதன் சிறப்புப் பாயிரத்தில் இவ்விருத்தாந்தங்கள் யாவும் பகர்ந்து, அதற்கு மேற்கோளாய்ச் சுமார் பன்னிரண்டு ஆசிரியர்களுடைய வியாசங்களைத் தொகுத்த வோர் மஞ்சரி செய்தனர். இவ்வாறு ஆங்கிலத்தில் இலக்கியவேற்ற ஆராய்ச்சி நிகழ்ந்து வருகின்றது.

நமது தமிழ் இலக்கியத்திலோ, அவ்வாராய்ச்சி கண்மூடிக் காட்டுக்குட் சென்ற தொழிலல்ல. இலக்கியவேற்ற ஆராய்ச்சி செய்யும் கருவிகள் பல,முறைகள் பல; அவ்வொழுங்கின் வண்ணம் ஆய்வது தர்க்க வொழுங்காய் யாவரும் ஆமோதிக்கத் தகுந்த பக்ஷபாதமற்ற நேர்வழியாகும். அவை யாவை எனக் காண்போம்.

2. தமிழின் சில கருவிகள்—பொதுக்கருவிகள்.

இவ்வாராய்ச்சியில் புகுவதன்முன்னம் ஆராயும் கருவிகள் யாவை எனக் கண்டறியவேண்டும். நமது இலக்கியத்திலோ வசன இலக்கியம் மிகவும் கொஞ்சமே. அவற்றைச் சற்று மறந்துவிடுக. பெரும்பாலும் நமது இலக்கியமாயுள்ள நூல்கள்யாவும் பாக்களேயாம். பாக்களுக்குள்சொல்லால் ஏற்றமும் பொருளால் ஏற்றமும் பொருந்தும். அத்தகைய ஏற்றம் பெற்ற நூல் அழகுடையதென்றும், அங்ஙனம் பெறாவிடின் அந்தம் இன்றென்றும் புலவோர் கூறுவர். ஒரு நூலுக்குப் பத்து அழகென்றார் நன்னூலார். அவையாவன :—

" சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்,
நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல்,
ஓசை யுடைமை, ஆழமுடைத் தாதல்,
முறையின் வைப்பே, உலகமலை யாமை,
விழுமியது பயத்தல், விளங்கு தாரணத்த
தாகுதல், நூலிற் கழகெனும் பத்தே."

சுருங்கச் சொல்லல் என்னும் அழகு மிக்க நூல் திருக்குறள். விளங்வைத்தல் என்னும் அழகு மிகுந்தன திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், தாயுமானவர் பாடல்கள். நவின்றோர்க் கினிமை, புகழேந்தி சிறைச்சாலையிற் செய்த அல்லி அரசி மாலை முதலிய பெண்களுக்குரிய நூல்கள். நன்மொழி புணர்த்தல் * என்னும் அழகு நமது இலக்கியத்தில் சிறந்த எல்லா நூல்களிலும் விளங்கும். ஓசை † உடைமை திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் காணலாம். ஆழமுடைத்தாதல், கம்பராமாயணத்தில் காணலாம். முறையின் வைப்பு, காவியங்களில் காணலாம். உலகமலையாமை வைதிக நூல்கள் நீங்க ஏனைய நூல்களில் காணக் கூடியதாம். விழுமியது பயத்தல், முத்தி நூல்களின் தொழிலாம். விளங்குதாரணத்தாகுதலுக்குத் தக்க உதாரணம் விருத்தப் பாவியல் என்னும் யாப்பிலக்கண நூலே. இத்தகைய அழகுகள் பெரும்பான்மையாய் இந்த நூல்களில் காணப்படுமெனினும், எல்லா நல்லிலக்கிய நூல்களிலும் காணக்கூடியவையேயாம்.

நல்லிலக்கிய நூல்களுக்கு ஆகாதனவாம் குற்றங்கள் பொருந்திய தேற்றம் பெறாதென மேலோர் கூறுவர். நூல்களில் வாராது தடுக்கவேண்டிய குற்றங்கள் பத்தெனப் பவணந்தி மொழிந்தனர். அவையாவன :—

" குன்றக்கூறன், மிகைபடக் கூறல்,
கூறியது கூறன், மாறுகொளக் கூறல்,
வழூஉச்சொற் புணர்த்தல், மயங்கவைத்தல்,
வெற்றெனத் தொடுத்தன், மற்றொன்று விரித்தல்,
சென்று தேய்ந்திறுத, னின்று பயனின்மை,
என்றிவை யீரைங் குற்ற நூற்கே."

இக்குற்றங்களில் ஒன்பது குற்றங்கள் ஒருநூலின் பற்பல சினைகளைப் பற்றியவை. "சென்று தேய்ந்திறுதல்" என்னும் குற்றம் நூலின் முதலைப் பற்றியதாம். அதாவது ஒருநூல் ஆரம்பிக்கும் காலத்தில் உள்ள சொல் நடைப் பொருள்நடை போகப் போகக் குறைந்துமுடிதலாம். இதற்கு உதாரணமாக அதிவீரராமபாண்டியன்

* இலக்கண விளக்கம் பாட்டியலையும், வச்சணந்தி மாலை முதலிய நூல்களையும் காண்க.

† " பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும் உண்ணின்றதோர் சுவையும் முறுதாளத் தொலிபலவும் மண்ணும் புனலுயிரும் வருகாற்றுஞ் சுடர்மூன்றும் விண்ணும் முழுதானானிடம் வீழிம் மிழலையே "

எழுதிய லைடதத்தை எடுத்துக் காட்டலாகும். குன்றக் கூறல் என்னும் குற்றம் சூளாமணியில் திவிட்டன் முத்திபெற நடாத்தும் துறவு கூறவேண்டியது கூருமல் குன்றக் கூறியிருப்பதையும் காணலாம். யாதேனும் ஒரு விஷயத்தை நிர்ணயிக்கப் புகுவோமானால் அதன் பூர்வ பக்ஷம், ஆக்ஷேபம், சமாதானங்கள் கூருது விடும்பக்ஷத்தில் அவ்விஷய நிர்ணயத்திற்குச் சரியான உருவு ஏற்படாது. ஆதலால் குன்றக் கூறல் ஆகாதெனப் புலவோர் மொழிவர். மிகைபடக்கூறல் சொல்ல வேண்டிய அளவு கடந்து அதிகமாய்ச் சொல்லுதல். எவ்விஷயமாகிலும் ஒருவர் தலையில் புகும் வண்ணம் கூறவேண்டியதே. அங்ஙனம் புகுந்த பின்னர் மேலு மேலும் அக்காரியத்தைச் செய்ய முயல்வது கேட்போருக்கு இனிமை பயக்காது. ஆதலால் எதையும் குன்றக் கூருமலும், மிகைபடக் கூருமலும் மொழிய வேண்டு மென்றார். "மாறுகொளக் கூறல்" என்பது முன்னே சொன்னதற்கு விரோதமாய்ப் பின்னே சொல்வதாம். ஒன்றுக்கொன்று முரணான விஷயங்களை ஒன்றாய்ச் சேர்த்தால் ஒன்றை ஒன்று அழித்துவிடும் அதனால் நூலின் பயன் அற்றுப்போம். வழூஉச்சொற் புணர்த்தலென்பது * குற்றமான சொற்களைச் சேர்த்து வைத்தலென்று, வித்வான் கோபாலாச்சாரியார் நன்னூலில் உரை எழுதியிருக்கிறார். ஆயினும் குற்றமான சொற்கள் என்பதே நமது அகராதியில் இல்லை. தமிழ்ச் சொற்கள் யாவும் குற்றமற்ற சொற்களே. ஆகையால் சொற்புணர்த்தல் என்பது மனதிலெண்ணிய எண்ணத்தைச் சரிவர வெளியிடும் சொற்கள் பிரயோகிக்காமல் அவற்றிற்குப் பதிலாய் வேறு சொற்கள் உபயோகிப்பது, வழூஉச்சொற் புணர்த்தலாம். "மயங்கவைத்தல்" என்பது இன்னதென்று துணியக்கூடாமல் மயங்கும்படி வைத்தலென்று அந்நன்னூல் உரையில் காணலாம். இரட்டுற மொழிதல் மயங்கவைத்தலாமோ? அன்று. இரட்டுறமொழிதல்‡ முப்பத்திரண்டு உத்தியில் ஒன்றாய்ப் புலவரால் பழிக்கப்படாதது. மயங்கவைத்தலோ அத்தகையதன்று. பல பெயர்ச்சொற்களும், பல வினைகளும் மருவிவரும் வாக்கியத்தில் எவ்வினைக்கு, எவ்வெழுவாயென்று அறியவொட்டாமல் சிறந்த நடையில் எழுதுவது மயங்கவைத்தலாகும். இதன்றியும் மயங்கவைக்கும் தோஷம் பற்பல காரணத்தாலும் ஏற்படும்.

"வில்லெடுக்கவுரி யார்கள் வெய்யசில வீரரிங்குமுனர் மெல்லியோய் கல்லெடுக்கவுரியானு னின்றனன் அது இன்று நாளையிடை காணலாம்." * என்பதில் கல்லெடுக்க உரியான் என்பது விபீஷணனைக் குறிக்கும். (உரி + யான்) என்று பிரியுமாகில் 'தன்னை'க் (ஆஞ்சனேயனை) குறிக்கும். மயங்கவைத்தல் என்னும் குற்றம் வெள்ளிப் பாட்டைக் காட்டிக் கொடுக்கும். மற்றொன்று விரித்தல் † சாதாரணமாகச் சபையில் பேசுவோர் குற்றமாகும் நூல்களில் பெரும்பாலும் காணப்படாததாம். மற்றொன்று விரிக்கும் குற்றத்தைப் பார்க்க வேண்டுமென்றால் புராணப் பிரசங்கங்களில் வேண்டிய அளவு பார்க்கலாம். நூல்களில் இருக்குமாயின் அந்நூல் சர்வவிகாரமாய் முடியும். நின்று பயனின்மை என்னும் குற்றம் சொற்கள் எண்ணிய தொழிலைச் செய்யாமை. அதாவது அச்சொல் கூர்மையாய் ஊடுருவிச் செல்லாமல் நிற்குமாயின், அங்ஙனம் நின்றும், பயனில்லாததாம். இத்தகைய குற்றங்கள் வாரா திருக்கும்படி காத்துக்கொண்டு நூலெழுதப் புக வேண்டு மென்று நமது இலக்கண நூல்கள் யாவும் மொழியும்.

(தொடரும்)

E. T. சொக்கம்மாள்.

*குற்றமான சொற்கள் யாவை, அவற்றைச்சேர்ப்பது யாது,என்னும்விடயம்,வெளிபிடாது மயங்கவைத்தனர்.

‡இரட்டுற மொழிதலுக்கு உதாரணம் கம்பராமாயணம் நாகபாசப்படலத்தில் பல காணலாம்.

* கம்பராமாயணம் நாகபாசப்படலம்.

† சிவஞானமுனிவர் "இலக்கணவிளக்கப் பொதுப் பாயிரம் மற்றொன்று விரித்தலென்னும் குற்றத்தின்பாற் படுமென்று" இலக்கண விளக்கச் சூருவளியில் கூறுகின்றனன். இதை 'ஆம்' என, அல்லது "அன்று" என மொழியும் தகுதி எனக்கில்லை. கற்றோர் ஆராய்க.

கம்ப ராமாயணம்

பால காண்டம்

4. அரசியற் படலம்.

[353-ம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவன்.

அரசனது அதிகாரத்திற்கும் செல்வத்திற்கும் உரியனவாகிய சின்னங்களையும் பொருள்களையும் கம்பர் இப்படலத்தில் கூருது விட்டுத் தயரதன், தன் பெருமைக்குத் தானே காரணமும் குறியுமாயிருக்கின்ற தன்மையை விளக்குவது போலவே, உலகுகாத்தலெனும் அருந்தொழில் புரிவதற்கும் அவனுக்கு உதவி புரிந்தவர் இருந்தனரென்பதை இப்படலத்தின்கண் காட்டினாரல்லர். நாற்படையும் நல்லமைச்சும் பாராக்கும் வேந்தனுக்கு உடனின்றுதவிசெய்வதற் கென்ற அங்கங்கள். கதையுடைத் தலைவனை அறிமுகஞ் செய்தவைக்கும் கவிகள், தந்திரபலத்தையும் மந்திரச் சூழ்ச்சியையும் உடன் சேர்த்தே இயம்புதல் மரபு. தன்னைக் காப்பதற்கு இயன்றன அரண்வலியும் சேனையின் மிகுதியும். அகழ் மதில் முதலிய அரண்களைக் கம்பர் அணியென அமைத்தனவேயன்றித் தயரதற்கு இன்றியமையாக் காவலென்றென முன்னரே கூறியுள்ளார். தருமத்திற் சிறந்ததொன்று நிலைகாத்தற் கில்லையாதலால் அத்தருமத்தின் உருவம் போன்ற தயரதனுக்குப் படைவலி மிகையாவது பற்றிக் கம்பர் சொல்லாது விடுத்தார். பகைவரவனுக்குப் பெரும்பான்மை இருந்திலர். மற்று இருந்தனரேனும் அவர்களைப் புறங்காணத் திசிரியும் வெல்லுதற்குத் தன் கை வில்லுமே போதும். இக்காரணம்பற்றித் தயரதன் "கயாதநாகமாக் கடல்கொள் காவலன்" ஆகி இருந்த போதிலும், அதனளவையேனும் திறத்தையேனும் அவனது இயலைச் சொல்கின்ற செவ்விநோக்கி இங்குக் கூறுதல் தவிர்த்தனர் கம்பர்.எனவே இத்தயரதப் பெயர் வள்ளல் வன்னுறை கழலா வேலினனும் இப்படலத்தின்கண் அமைகின்றான். செறுநரை இரியல்போக்க இவனது சுய

ஆற்றல் ஒன்று சாலும். இவன் கையடைந்த வேல் தேயுமெனின் பகைவருடல் பீறிப்பீறி யன்று. பகைவர் சிலர் படையெடுத்து வருவாரெனின் அவரவர் வன்மைக் கேற்றவாறு தயரதன் தன் கைவேலை, ஒருமுறை, இருமுறை மும்முறையெனத்தீட்ட, இன்னவாறு இவன் தீட்டுகின்றனன் எனக் கேட்டமாத்திரத்தில் அவர் ஓட்டம் புகுவாராதலின், அது தேய்வடைய நேர்கின்றது. இவன் காலணிந்த கழலும் அப்பகையரசர் தோற்றனர்வந்து பணியப்பணிய முடிபட்டுத் தேய நேரிடும். இக்கருத்தினைக் கொண்டு

> ஆவரும் வன்மைகே றறிந்து தீட்டலால்
> மேவருங் கையடை வேலுந் தேயுமால்
> கோவுடை நெடுமணி மகுட கோடியால்
> சேவடி யடைந்தபொற் கழலுந் தேயுமால்

எனக் கம்பர் எடுத்துக் காட்டினர்.

தொகையிலும் அருங் குணத்திலும் அளவிறந்த அமைச்சர் பலர் இவ்வரசற்கு இருந்த வாய்மையைப் பின் அயோத்தியா காண்டத்தின் மந்திரப்படலத்தில் காண்போமாயினும், "அரசு இயல்" படலத்தில் அவர்களைக் கம்பர் சேர்க்காததும் தனிப்பெருந் தயரதனின் சிறப்பை நோக்கியே யாகும். இக்கால முறையைப்போல்,அரசனை அளவிற்குள் வைத்து அடக்குதற்கேனும், மற்று நீதி இதுவெனத் தேர்ந்து அவனுக் குரைப்பதற் கேனும் தயரதன் திறத்தில் அமைச்சர் அவசிய மில்லை. செய்கருமம் ஓர்வதற்கும் ஓர்ந்த கருமத்தைச் செய்வதற்கும், "கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன்" இவன். மதியாயும் விதியையும் போரியற்றும் வீரரையும் தயரதன் இந்நுக் கவியின் கையில் பெறுததன் காரணம் முன்னிங்குக் குறித்ததே ஆகுமென்பதைக் கோசிகமுனிவன் சனகமன்னவனிடத்தில் இராமனது குலமுறையும் வரலாறும் வகுத்துரைக்கும்போது இத்தயரதனைப் பற்றித்,

> துணியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
> பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
> தனுவன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான்
> மனுவென்ற நீதியான்.............."

[உயிர்கள் யாவும் அச்சமும் துன்பமும் இல்லாமல் வாழுமாறு, சூரியன் பனியை அகற்றுவதுபோல் முயற்சியேதுமின்றியே தன்கைச் சக்கிரத்தின் ஒளியாலேயே பகைவரை வென்று பூமியைக் காக்கின்ற இத்தயாதன், தன் சரீரமல்லாது தனக்கு வேறுதுணை இல்லாதவன். தருமம் ஒன்றையே தன்னைக் காக்கும் கவசமாக உடையவன். மனுவினும் மிகுந்த நீதி வாய்ந்தவன்]

என வகுத்தலால் தெற்றென உணரக் கூடியவராகின்றோம்.

அரணும் படையும் அமைச்சரும், ஆதலால், தயரதனுக்குப் பயன்செய்யாது அழகிற்கே இருந்த பான்மையால், இச்செய்தி யாவும் இங்குக் கூறுவது இயற்கையாகாதென விடுத்த கம்பர்பிரான், மற்றொன்று அரசர்க்கு அங்கமென்று கருதப்படுகின்றதை, இங்கு மாத்திரமன்றி இந்நூலுள் வேறெங்குமே, வாய்வைத்துச் சொல்லாததற்காக நாமவரைப் பெரிதும் வாழ்த்த வேண்டியவரா யிருக்கின்றோம். அரசு செலுத்துமொருவன் ஒற்றரின் உதவி வேண்டுதல் அவனிற்கும் அவன் நாட்டிற்கும் அழியாப் பழியேயாகும். ஒற்றூடல் புரிவா னரசன், நாடாண்டானல்லன் தன் போராண்டானல்லன், உலகுள்ளளவும் நீரதவசையே பூண்டான். தன் மக்களுக்கு நிகராகக் கருதவேண்டிய குடிகளை ஆள்வதற்கும், பகையரசை வெல்வதற்கும் ஒற்றருறவு வேண்டுமாயின் அவன் கோலும் வேலும் என்னும்! ஒற்றென்பது அரசன் பிரஜைகள் இருதிறத்தவர் மானத்தைத் துடைப்பதற்கு இருபுறத்தும் கூர்வாய்ந்த வாளாயிற்று. விசயன் உரைத்த சூளை ஒன்னலார் மாட்டுச் செப்புவித்த யுதிட்டிரன் ஒற்றூடிலன். தனக்கு எதிராகத் தானே ஒற்று ஒதியும் கொற்றங் கொண்டனன். மற்று,

> 'ஒற்றினு னொற்றிப் பொருடெரியா மன்னவன்
> கொற்றங் கொளக்கிடந்த தில்'

[ஒற்றர்களாலே மற்றவர்களது பொருளை விசாரியாத மன்னவன் பெறுவதற்கொரு வெற்றி இல்லை]

என்ற குறளின் தந்திரத்தை, "விறல் நெறியாவது பொய்யிலது" என்பதை உற்றுணர்ந்து, கைவிதிர்த்த தூய்மையும் பெருமையும் வில்லிபுத்தூரார் தருமனுக்கு நல்குகின்றார். திருவள்ளுவர் பொருட்பாலில் ஒற்றாடலிற்கோ ரதிகாரம் கொடுத்துவைத்தது, அற்பச் சூழ்ச்சியும் அளவுள்ள ஆற்றலும் லோகாயத மனமும் உடைய சிறு மானிட மன்னவரைக் கருதியே யல்லாது தருமனையும் தயாதனையும் அனையராய்க் கடவுளை முன்னிட்டுக் கடனாற்றுந் திப்பிய வேந்தரைத் தெருட்டுதற் கன்று. குடிகளை ஒற்றரால் ஆயும் அரசனும் மனைவியை மறைந்திருந்து சோதிக்கும் புருடனும் ஒரு திறத்துப் புன்மையோர். குடிகளை ஆய்வோன் அவர் அன்பை நம்பாதவன். பகைவரை ஆய்வோன் தனது ஆற்றலை நம்பாதவன். அவாதாரியலை அச்சமே இயக்குகின்றது. எனின் வசை வேறுளதோ! தவசிகள் வேடம்பூட்டி ஒற்றரை விடுப்பர் வள்ளுவர்.ஒற்றரையுமே மறு வொற்றர் விட்டுச் சோதிக்கவும் சொல்வா ரவர். சிறு செயல்களிவை தயரதனின் சிந்தனைக் கொவ்வா. ஒற்றாடக் கற்றிரா வேந்தனையே கம்பர் கோசலத்திற்குத் தந்தார்.

ஆளும் வேந்தனென்றும் ஆளப்படும் பிரஜைகளென்றும் இருபிரிவுகளாகி ஒன்று மற்றொன்றின் நிலைமையைப்பற்றி மாறுடப் புகுகின்ற காலத்தில் அவ்வரசியல் சிக்குண்டு குழம்பலாகின்றது. குடிமக்கள் தமக்குள்ள உரிமையும் அரசன் தனக்குரிய இறையையும் நெடிது நினைந்து விவகரிக்க நேருமாயின் அந்நாட்டின் ஒற்றுமைச் சமஇசை ஒழிந்துவிடவே, நல்வாழ்வு வாழுமாறெவ்வாறெனும் எண்ணம் கழிய, அழியாது நின்றால் அருமை எனும் கருத்தொன்றே தலைசிறந்து தோன்றுவதும் வியப்பன்றே. களிதங்கிய இங்கிலாந்து (Merry England) எனப் பேரெடுத்த அந்நாட்டிலே ட்யூடர் வம்சத்தவர்களும் (Tudors), ஸ்டூவர்ட் வம்சத்தவர்களும் (Stuarts) அரசு செலுத்திய காலத்தில், மூந்நூறு ஆண்டுகளளவு, வருடம் மூந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் பழந்தொங்கிய மரம் தூக்குமரமா யிருந்தது. ஓய்வு இல்லா வேலை புரிபவனும் கொலையாளி யாயினன். எனது ஆட்சி எனது உரிமை என்னும் இம்மாறுபாட்டில் குடிகள்சேர்ந்து முதல் சார்லஸ் (Charles the First) என்னும் தமதரசனின் தலையைத் துண்டித்துவிட்டனர். ஜனங்களுக்குத் தலைவனாயிருந்து இக்காரியம் செய்து முடித்தவன் ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) என்பவன். பிற்காலத்தில், அரசனது அதிகாரமே உயர்ந்ததெனும் கொள்கையுடைய ஜான்ஸன் (Samuel Johnson) என்னும் புலவர், ஜனங்களுக்கடங்கியே அரசன் ஆளவேண்டும் என்னுங் கட்சியைச் சேர்ந்த பாஸ்வெல் (Boswell) என்பவரோடு அரசியல் தத்துவங்களைப் பேசிவரும் சமயத்தில், "நீர் பாராட்டும் இந்தக் கிராம்வெல் சாதித்ததுதான் என்ன!" என இகழ்ந்தார். அதற்குப் பாஸ்வெல், "ஐய, அரசர்தம் கழுத்திலும் ஒரு கணு உளதென்பதை விளக்கிக் காட்

டினான்," எனத் தாழாதெதி ருரைத்தார். குடிகள் தம் அரசனது கழுத்திலே கணுவினிருப்பை ஆராய நேர்ந்ததெனின் இவனும் அவர்களது கழுத்தைப் பலதலை முறைகளாய்க் கத்தரித்துக்கொண்டு வந்ததாற்றான் நேர்ந்தது. "மன்னவர் நெஞ்சினில் வேடர்விடும் சரம் வாயாவோ," எனக் குகன் உற்ற ஐயத்தைத் தீர்ப்பான் வினவியதும், "என்னிவன் என்னை இகழ்ந்து இவ் எல்லை கடந்தன்றோ" என்னும் நினைவினாற்றான்.

இக்கால இங்கிலாந்திலும் மற்றைய மேனாடுகளிலும் அரசனுக்கும் குடிகளுக்கு மிடையே கழுத்துக்கள் தம் கணு நழுவாது பெரும்பான்மை (இரஷ்யா தேசத்தைத் தவிர) அமையலாம். ஆயினும் அக்கருணை வெகு அற்பம். ஏனெனில் அரசன் என்பவன் இப்பொழுது ஆளுரவமற்றுக் கரைந்து போயினன். ஒரு நாட்டில் எவரெவர் கையில் அதிகாரம் அகப்பட்டுக்கொள்கின்றதோ அவர்களெல்லாம் அவ்வப் போதிற்கு ஆள்கின்றவராகி விடுகின்றனர். அரசாங்கத்தார் எனும் பேர் இவர்களுக்கு இடுகின்றாரெனினும், அங்கமே அரசாய பரிசு இங்குக் காண்கின்றோம். ஆதலால் பெற்றவர் பெற்ற அதிகாரத்தை இழக்காமல் வைத்தாள முயல்வதும், மற்றவர் அவர் கைகளினின்று அவ்வதிகாரத்தைப் பற்றிக்கொள்ளத் தவிப்பதுமாய் முன்னைய மாறாட்டமே பின்னும் நிகழ்ந்து வருகின்றது. ஆள்வோர் ஆளப்படுவோர் என்னும் பிரிவெண்ணம் மனிதரின் மனதில் இயங்குகின்ற வரையில், குறிவைத்த இடம் மாறினும், கைகொண்ட பரசு தாழாது. தான் தான் என்று தலைக்கேறிய சுயநயம், தனதாய வர்த்தகக் கைத்தொழில் இயக்கங்களிலும் பிறநாட்டுடன் செய்யும் காரியங்களிலும், "வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் பெருவழக்கிற்கு" இழுக்கில்லாதபடி யாவற்றையும் நடத்திவைக்க முற்படுவதே இயற்கையாம்.

எனக்கே என்று (பிரிநிலை ஏகாரத்தோடு) பேசும் உரிமை ஒவ்வொன்றும் வேறொருவனுக்கு உள்ள உரிமையொன்றிற்கு நேர் எதிராக இருக்கத்தான் வேண்டும். அரசியல் முறைகள் மாறினும் மாறலாம், கட்சிகள் எழுவதும் விழுவதும் ஆகலாம், போரில் தோற்கலாம் வெல்லலாம்; ஆனால் ஆள்பவர் ஆளப்படுபவர் என்னும் இவ்விரு திறத்தார்க்கும் உள்ள மாறுபாட்டின் வேற்றுமை அப்படியே, ஒருவரும் வெல்லாமல் ஒருவரும் தோற்றொழியாமல், இருந்து வருகின்றதே. இவ்விரு தனிநல உரிமைகள் சிலசமயம் எதிரெதிர் எதிர்த்து மோதிக்கொள்வதுமாகும். அக்கால நிகழ்ச்சிகள் கொடியன. மற்று ஒன்றின் நலம் மற்றதற்குத் தீதாயிருந்தும், இப்பின்னது பலமற்றுத் தாழ்ந்து கிடக்குமேல் அந்நிலை பரிதாபத்திற் கிடமாயது. குடிகாக்கும் வேந்தனை ஆடு மேய்க்கும் இடையனுக்கு நிகராக மேனாட்டார் பேசுவர். ஆட்டினை இடையன் மேய்ப்பதெல்லாம் பின்னான் தன் நலத்தைக் கருதியே யல்லாது அவ் வாட்டின் நலத்திற்கன்று. கொழுத்த மந்தை முடிகின்ற இடம் எது வென்பதை அறியாதார் யார். "ஆடே உன்னைக் காக்கின்ற கடன் எனது; உன்னைத் தின்னும் உரிமையும் எனக்குண்டு" என்பான் இடையன். "ஐய, யான் உயிரோடிருக்கும் உரிமை, எனக்கும் இல்லையோ" என்று கேட்க வாயிருப்பினும் ஆட்டிற்கு எது பயன். அதைச் சாதிக்கும் திறனில்லையே.

ஆதலால், முல்லைத் திணைநின்றெடுத்த இவ்வுவமை மோசக் கருத்துடையது. கோசலத்திலே, இடையனுக்கும் மந்தைக்கும் இருப்பதுபோன்ற உடன்படிக்கை அரசனுக்கும் குடிகளுக்கும் இல்லை. இருவிதம்பட்ட உரிமைநலம் கோசலத்தின் அரசியலில் புகுந்திலது. பரஸ்பர நலங்கள் அரசனும் குடிகளும் பெற்றனர் என்றாலும் முற்றிலும் பொருந்தாது. இருவரும் இரண்டறக் கலந்துவிட்டனர். இருப்பது ஒன்றே. இந்த வாய்மையைக் கம்பர்,

> வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினான்
> உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
> செயிரிலா வுலகினிற் சென்று நின்றவாழ்
> உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்.

[வயிரமணிகளிழைத்த ஆபரணங்களை யணிந்த வோர் சிங்கத்தைப்போன்ற ஆற்றல் உடைய தயாதன், உயிர்களை எல்லாம் தன்னுயிரையே போலப் பாதுகாத்ததலால், தீதற்ற இவ்வுலகிலுள்ள சராசர உயிர்கள் யாவும் சேர்ந்து தங்கிய ஒரு உடம்பிற்கு நிகரானான்]

என்னுமோ ரினிய பாசுரத்தி லருமையா யமைத்துப் பாடினார்.

எனது நினைதெனும் பொல்லாப் பிணக்கம் முற்றிலும் மற்று ஒன்றினு ளொன்று அயோத்தியி னரசியலில் மூழ்கிய விதம் இது. உயிரும் உடலும் ஒன்றாகச் சேர்ந்து மனிதன் என்னும் ஒருவன் ஆகின்றான். அரசியல் என்பதும் ஒன்று. அதனில் அரசன் உடலே. அவன் ஆள்கின்றதாகக் கருதப்படுகின்ற உயிர்களின் தொகுதியே அவ்வரசியலிற்கு உயிராகின்றது. உயிரானது உடல் அழியாமல் காக்கின்றது. எனினும் உயிர் இருப்பதெல்லாம் உடலைப் போற்றுவதற்காகவல்ல. ஆன்மா தனக்குரிய முத்திநெறி முதிருமாறு தங்குதற்கு உடலை இடமாகக் கொண்டுளது. இவ்வகை இடநலம் அளிப்பதற்காக உடலும் ஆன்மத்தினிடத்தில் மறுபலன் ஒன்றும் வேண்டுவதுமில்லை. ஆன்மா சரீரம் இரண்டனுள் ஆன்மாவே முக்கியமாயது. உடலின்றியும் ஆன்மாவிற்குத் தனிநிலை இருப்புளது.

அரசனை உடலாகவே உருவகஞ் செய்ததில் இவ்வரசியல் தத்துவங்கள் யாவும் அடங்கி மாறுபடு நினைவிற்கு இடனிலாதமைகின்ற பெருமை இப்பாசுரத்தில் காணக் கிடக்கின்றதாதலால் எடுத்தினைத்துக் காட்டுதல் மிகையாம்.

T. N. சேஷாசலம்.

மதிப்புரை

ANCIENT JAFFNA.

By Mudaliar, C. Rasanayagam, Ceylon Civil Service

[பண்டைக்கால யாழ்ப்பாணம் என்னும்பெயர் வகித்த சரித்திர ஆராய்ச்சி நூல் ஸ்ரீமான் முதலியார் C. ராசநாயகம் C. C. S. என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வெளிவந்திருக்கிறது. இதன் விலை குறிக்கப்படவில்லை. பெற விரும்புவோர் ஆசிரியரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.]

பண்டைக்கால யாழ்ப்பாணம் என்று பெயர் கொண்டிருந்தபோதிலும் இந்நூல் தமிழ் உலகின் சரித்திர ஆராய்ச்சியின் ஒருபாகமென்று கொள்ளத்தக்கது. அது மாத்திரமன்று. புராதன உலகசரித்திரத்தின் ஆராய்ச்சியையே ஒரு சிறிது தன்னுள் அடக்கி யிருக்கின்றது. ஆகவே, இந்நூல் யாழ்ப்பாண இலங்கை வாசிகளுக்கு மாத்திரமன்றிப் பொதுவாய்த் தமிழ்மக்களுக்கும் மற்றும் உலகசரித்திர ஆராய்ச்சி வாணருக்கும் மிகவும் பயன் அளிக்கத்தக்க வொன்றாய் இருப்பதற்கையமில்லை.

ஆசிரியர் முன்னுரையில் குறித்திருக்கும் வண்ணம் ஆராய்ச்சிமுறை வழுவாது தமக்கு எட்டிய சான்றுகளை வைத்து நோக்கிக் கண்டமுடிபுகள் இதுகாறும் மற்றைய ஆராய்ச்சி வல்லவரால் கண்ட முடிபுகளுக்கு முரணாயிருந்தாலும், இவர் இறங்கிய துறையில் இறங்கி இவரால் கண்ட முடிபுகள் சரியானவைகளா அல்லவா வென்பதை நன்கனம் ஆய்ந்து தீர்மானிப்பது யாழ்ப்பாண சரித்திர சாஸ்திரிகளின் கடனாகும்.

இந்நூல் யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தை ஆதிகாலம் தொட்டுப் போர்த்துகீயர் இலங்கையைக் கைப்பற்றிய நாள் வரையும் தொடர்பாகக் கூறுகின்றது. ஆசிரியருக்கு அகப்பட்டிருக்கும் சான்றுகள் குறைந்தவளவினவேயெனினும் இவைகளின் உதவியால் அவர் கண்ட முடிபுகள் சுலபமாய் மறுக்கற்பாலனவல்ல. சிற்சில விடங்களில் அவர் முடிபுகளுக்கு ஆதாரம் இல்லாததுபோலத் தோன்றினாலும் ஆதாரங்களோடு கூடிய முடிபுகளோடு ஒத்து நோக்குமிடத்து இவைகளும் சரியான முடிவுகளென்றே எண்ணவேண்டி யிருக்கிறது.

சரித்திர ஆராய்ச்சிக்கு எட்டாத காலத்திலேயே இலங்கையில் மிகவும் சீரும் சிறப்புமுள்ள சனங்கள் சீவித்திருந்தார்கள். இவர்களுக்குள் இயக்கர் என்போர் மூந்தியவர். அவருக்குப் பின் நாகர் வடஇலங்கையில் சிறப்புற்றோங்கி யிருந்தார். பின்னர், இயக்கர் நாகர் தமிழர் ஆரியர் கலந்தே தற்கால ஈழமண்டல வாசிகளாயிருக்கவேண்டும். நாகர் காலத்திலே யாழ்ப்பாணம் சிறந்து விளங்கியிருந்தது. இப்போது ஆனையிறவுக் கடல் என்று சொல்லப்படும் கடல் பண்டை நாள் கப்பல்கள் செல்லத்தக்க ஆழமாயிருந்தது. அதன் இரு கரையிலும் அரேபியா எகிப்து கிரேக் சிரியா முதலிய தேசத்து வியாபாரக் கப்பல்கள்வந்து தங்கியிருந்து கிழக்குத் தேசத்து வியாபாரிகளோடு சந்தித்த பெரும் வியாபாரத்துறைகளாயிருந்ததென்பதும் இந்நூலின் துணிபு. ஆசிரியர் காட்டும் இடங்களின் பெயர்களும் அழிந்து கிடக்கும் அனேக புராதன நகரங்களும் பழைய தமிழ் நூல்களில் காணப்படும் குறிப்புக்களும் கிரேக்க ரோம பிரயாணிகள் எழுதிவைத்த குறிப்புக்களுமே இதற்குச் சான்றாகும்.

இதற்குப்பிந்திய காலத்திலும் யாழ்ப்பாணத்தில் வல்லமை பெற்ற அரசர்கள் அரசாண்டிருந்தார்கள். இவர்கள் சரித்திரங்களும் சிதைவுபட்டுப் போனதுமன்றி மகாவம்சம் என்னும் சிங்கள நூலில் ஆராய்ச்சியின்றி கர்ணபரம்பரையாய் வந்த கதைகளை மாற்றியும் கூட்டியும் எழுதி வைத்திருப்பதால் உண்மை வெளிப்படாமல் இருந்தது. இதை ஆசிரியர் தமது ஆராய்ச்சி வல்லபத்தால் பிற்காலச் சரித்திரத்தையும் சீர்படுத்தி யிருக்கிறார்.

முதல் அதிகாரத்தில் ஆசிரியர் வட இலங்கையில் நாகர் கி. மு. ஆறாம் நூற்றாண்டுமுதல் கி. பி. நாலாம் நூற்றாண்டு வரையிலும் அரசாண்டிருந்தார்கள் என்றும் அவர்கள் நகரம் யாழ்ப்பாணத்தில் கதிரைமலை (தற்காலம் கந்தரோடை) என்னு மிடமாயேனும் அல்லது மன்னாருக் கருகிருக்கும் மாதோட்டமாயேனும் இருக்கவேண்டு மென்பதை ஸ்தாபிக்கின்றார். இதுமாத்திரமன்று. பழைய தமிழ்நூல்களிற் குறிக்கப்பட்டிருக்கும் இடங்கள் சில இந்த நாட்டில் உள்ள இடப்பெயர்களே என்பதையும் வெளிப்படுத்தி யிருக்கிறார். முக்கியமாய் மணிபல்லவம் என்று மணிமேகலையிற் சொல்லப்பட்ட இடம் யாழ்ப்பாணமே என்பதும் மகாபாரதத்தில் மணிபுரம் என்று குறிக்கப்பட்டிருக்கும் இடமும் யாழ்ப்பாணம் அல்லது யாழ்ப்பாணத்திலிருந்த ஒரு நகரமாய் இருந்திருக்க வேண்டுமென்பது இவர் துணிபு. இதைத் தவிர, மாந்தை என்று பழைய நூல்களிற் கண்டிருக்கும் இடம் மாதோட்டம் என்பதும், கதிரைமலை என்று வழங்கிவந்த பெருநகரம் தற்காலம் யாழ்ப்பாணத்தில் கந்தரோடை என்று சொல்லப்படும் இடமே என்றும் கருதுகிறார்.

இரண்டாவது அத்தியாயம் கலிங்கர் இலங்கைக்கு வந்த வரலாற்றையும் அவர் இலங்கையில் குடியேறிய வரலாற்றையும் கூறுகிறது. கலிங்கர் கி. மு. ஆறாவது அல்லது எட்டாவது நூற்றாண்டில் இலங்கைக்கு வந்தார்கள். விசையன் என்போன் ஒரு சிறு சேனையுடன் வந்து இலங்கையைக் கைப்பற்றினான் என்பது சரித்திரம். ஆனால் இது உண்மையான சரித்திரமா யிருக்க முடியாதென்பதை ஆசிரியர் பல சான்றுகளைக்கொண்டு விரிவாய்த் தெரிவித்திருக்கிறார். அவர் துணிபு, கலிங்கர்வந்து குடியேறி இலங்கையை தம் குடைக்கீழ் கொண்டபோதிலும் வட இலங்கையில் நாகர் இராச்சியம் பழுதுபடாமல் நடந்துகொண்டே வந்தது,என்பது. அதுவன்றி, நாளடைவில் நாகரும் கலிங்கரும் ஒன்றாய்க் கலந்து விட்டார்கள்.

மூன்று மதிகாரத்திலும் ஐந்தா மதிகாரத்திலும் பிறநாட்டு வர்த்தகத்தையும் பிறநாட்டுப் போக்கு வரவையும் பற்றி எடுத்துச் சொல்லி இதன் முடிபாக் இலங்கையின் வடமேற்குச் சமுத்திர தீரங்கள் பண்டைநாளில் மேற்குத் தேசத்தவரும் கிழக்குத் தேசத்தவர்களும் சந்தித்துப் பண்டமாற்றுச் செய்து கொண்ட பெருங் களஞ்சியங்களாக விருந்தன வென்பதும், இதன் காரணமாகவே அனேக பட்டணங்களும் நகரங்களும் மிகவும் செல்வம் பொலிந்து அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்திலும் வடமேற்குக் கரைகளிலும் விளங்கின வென்பதும் காட்டியிருக்கிறார்.

கடைசி மூன்று அதிகாரங்களும் பிற்காலம் அதாவது கி.பி. 4-ம் நூற்றாண்டுக்கு மேலதை அரசாண்ட அரசர்களது வரலாற்றை ஒழுங்குபடுத்திக் கூறுகின்றது. இந்தப் பாகத்தில் இவ்வாசிரியர் யாழ்ப்பாண சரித்திரத்

தைப் பற்றிப் பிற்காலத்தெழுந்த அனேக கட்டுக்கதைகள் சரித்திர ஆராய்ச்சியால் மெய்யென நம்பத்தக்கவை அல்லவென்பதைக் காட்டி யாழ்ப்பாணத்தை ஆரிய அரசர்கள் வரிசையாகப் போர்த்துகியர் காலம் வரையில் ஆண்டுவந்தார்கள் என்பதைப் பல ஆதாரங்களைக் கொண்டு நிலைநிறுத்தி யிருக்கிருர்.

ஆசிரியரது எல்லையற்ற முயற்சியையும் அவர் தம் நுண்ணிய அறிவின் பெருக்கையும் அவர் நூலைப் படித்து அறியலாமே யல்லாமல் இம்மதிப்புரையில் அவற்றை எடுத்துக் காட்டுவது எளிதல்ல. அரசாங்க உத்தியோக அலுவல்களுக்கிடையே இவ்விதப் பெரியதோர் ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய அவகாசத்தைத் தேடிக்கொண்டு விடாமுயற்சியுடன் இதனை முடிவுசெய்ததற்காக யாழ்ப்பாண இலங்கை வாசிகளும் மற்றுச் சரித்திரப் பற்றுடைய எவருமே இவருக்கு என்றும் கடமைப்பட்டவர்களா யிருப்பார்கள். இதுவன்றியும், கல்லூரிப் படிப்பு முடிந்ததும் எல்லாம் கற்ருய் விட்டதென் றெண்ணிப் புத்தகங்களைக் கட்டிவைத்து அவமே காலங் கழிக்கும் இளைஞருக்கு இவரும் இவரைப் போன்று என்றும் கற்றலே கல்வி என்று காட்டும் பெரியோரும் வழிவிளக்கும் தீபமாகத் திகழ்வா ராகின்றனர்.

வர்த்தமானம்.

தந்தி பரிசோதனை:— தந்திகளை அனுப்புகிறவர் கையெழுத்துப் போலவே இருக்கச்செய்ய முடியுமா யென்பதைப் பற்றிப் பரிசோதனைகள் செய்துகொண்டிருக்கிருர்கள்.

***

பத்துரூபாய் நோட்டுகள்:— பொய்யானவை அனேகம் கடைமுதலி விருப்பதாகப் போலீஸ் கமிஷனர் தெரிவிக்கின்ருர். யாவரும் இந்த நோட்டுகளை வாங்குவதில் வெகு சாக்கிரதையா யிருக்கவேண்டும்.

***

மகாகவி இரவீந்தரநாத் தாகோர்:-ஐரோப்பாவிற்குப் போவதற்காகக் கல்கத்தாவைவிட்டு இந்த வாரம் புறப்பட விருக்கின்ருர். இவருக்குக் காரியதரிசியாக, மிஸ்டர் A. E. வில்லியம்ஸ் என்பவர் உடன் செல்வர்.

***

டாக்டர் பெசன்ட்:—ஜுன்மாதம் 2-ம் தேதி இங்கிலாந்துக்குச் செல்லவிருக்கிருர். அங்கு லண்டனிலும் மற்று வேறு இடங்களிலும் இந்தியாவின் அரசியல் விஷயமாய் உபன்னியாசம் செய்து ஆகஸ்ட்டுமாதம் முடிவில் இந்தியாவுக்குத் திரும்பிவருவார்.

***

ஆப்கானிஸ்தானில்:—மண்எண்ணெய் எடுக்கும் உரிமையைச் சிலஅமெரிக்க தனவந்தர்கள் அமீரிடம் பெற்றிருக்கிருர்கள். இவர்கள் இந்த உரிமையைக் குறித்த காலம் வரைக்கும் நடத்திப் பின் அரசாங்கத்தாருக்குச் சொத்துகளை ஒப்படைத்து விடுவார்கள்.

***

சென்னையில் மோட்டார் பஸ்களினுல் உண்டாகும் விபத்துகளைக் குறைப்பதற்காக வேண்டிய ஒழுங்குகள் சீக்கிரத்தில் அரசாங்கத்தார் செய்ய விருக்கிருர்கள். இது சம்பந்தமாக போலீஸ் கமிஷனர் உதகமண்டலத்துக்குச் சென்று அவ்விடம் அரசாங்கத்தாருடன் யோசனைசெய்து வருவார் என்று தெரிகிறது.

***

புரபஸர் இந்திரா:—மிகவும் நோயுற்று வருந்துகின்ருர். டாக்டர் அன்ஸாரி அவருக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்துகொண்டு வருகின்றனர். தேக அசௌக்கியத்தின் காரணமாக அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்யும்படி பஞ்சாப் அரசாங்கத்தார் இந்திய அரசாங்கத்தாருக்கு எழுதியிருக்கிருர்கள் என்று தெரியவருகிறது.

***

தமிழ்ச் சர்வகலாசாலை:— இது விஷயமாக ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் கமிட்டியார் தங்கள் அறிக்கைப்பத்திரம் வெளிப்படுத்தி யிருக்கிருர்கள். இதன் அங்கத்தினர் 35 பேர். இவர் 155 சாக்ஷிகளை விசாரணை பண்ணி இதன் முடிவாக ஒரு தனிச் சர்வகலாசாலை அவசியமென்றும் அது திருச்சிராப்பள்ளியில் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் கண்டிருக்கிருர்கள்.

***

சைமன் கமிஷன் விசாரணை மதுரை ஜில்லா போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்கள் எல்லாரையும்சென்னை அரசாங்கத்தார் சைமன் கமிஷனுக்கு ஒரு விண்ணப்பப் பத்திரம் கொடுக்கும்படி கேட்டிருக்கிருர்கள். இதற்காகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை மதுரையில் எல்லாச் சப் இன்ஸ்பெக்டர்களும் கூடி ஒரு கமிட்டி ஏற்படுத்தி இதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்திருக்கிருர்கள்.

***

பம்பாய்த் தொழிலாளர் வேலை நிறுத்தம் தொழிலாளர் அவர்களது கம்மிட்டி மூலமாய் முதலாளிகளுக்கு அனுப்பிய கோரிக்கைகளுக்கு முதலாளிகளால் சரியான பதில் கொடுக்கப்படவில்லை. ஆலைகள்முன் நின்று உள்ளே ஒருவரும் போகாமல் தடுப்பதென்று தீர்மானம் செய்திருக்கிருர்கள். தற்காலம் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் சீக்கிரத்தில் இவ்வேலை நிறுத்தம் முடியும் என்று தோற்றவில்லை.

***

கல்கத்தாவில் கதர் விர்த்திக்காக அகில இந்திய நூற்போர் சங்கத்தின் அங்கத்தினர் சென்ற ஒருமாசமாகப் பல இடங்களில் பிரசங்கங்கள் செய்தும் பணம் சேகரித்தும் வந்தார்கள். அனேகர் பணஉதவி செய்திருக்கிருர்கள். இதைவிடக் கதரையே உடுத்தவேண்டும் என்னும் கிளர்ச்சி எங்கும் பரவியிருக்கிறது. இவ்விடத்தில் சேர்க்கப்பட்ட பணம் ஒருலக்ஷம் ரூபாய் வரையிலிருக்கும்.

***

சுபாஷ் சந்திரபோஸ்:—அமதாபாத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் இந்தியாவிலுள்ள நெசவு ஆலைகள் சொந்தக்காரர்கள் எல்லாரும் சனங்களுடன் ஒத்துழைப்பார்களானுல் வெகு சுலபமாய்ப் பிறதேசத் துணிகளைப் பகிஷ்காரம் செய்யலாம் என்றும் இந்தப் பகிஷ்கார இயக்கத்தைத் தேசமடங்கலும் விடாமுயற்சியுடன் பரவச் செய்யவேண்டும் என்றும் அவ்விதம் செய்தால் ஒருவருஷத்துக்குள் எவ்வளவோ அனுகூலம் அடையலாம் என்றும் சொன்னுர்.

***

பார்டோலியில் நிலவரிகொடுக்காத இயக்கம்:—பர்டோலியில் சனங்கள் நிலவரி கொடுக்காமல் நிறுத்திவிட்டதால் அரசாங்கத்தார் ஜப்தி வேலை அதி சுறுசுறுப்பாய் நடத்துகிருர்கள். ஒரு இடத்தில் எருமைகளை எல்லாம் ஜப்தி செய்து விட்டதால் இவ்விடத்தில் குழந்தைகளுக்குப் பால் கிடைக்கவில்லையாம். ஜப்தி நோட்டீஸ்களும் பறிமுதல் நோட்டீஸ்களும் எல்லாருக்கும் கொடுத்திருக்கிருர்கள். பார்டோலி தாலுகாவுக்கடுத்த பென் என்னும் தாலுகாவிலும் இந்த இயக்கம் ஆரம்பமாகும்போலத் தோற்றுகிறது.

***

சீனுவில் யுத்தம்:—சென்ற வாரம் சீனுவில் ஜப்பானியருக்கும் சீனருக்குமிடையில் தீசினன்பு என்ற இடத்தில் ஒரு போர் நடந்ததாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் ஜப்பானியர் தங்கள் எல்லை கடந்து சீனருடைய படைகளைத் தாக்கியும் சீனரைப் பலவகையான ஹிம்சைகள் செய்ததனுலும் உண்டானதென்பது சீன அதிகாரிகளுடைய அறிவிக்கை. இந்தப் போருக்கு முன்னும் பின்னும் பலவகையான அக்கிரமங்கள் இருதிறத்தாராலும் செய்யப்பட்டன. இப்போது சண்டை நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனுல் ஜப்பானிலிருந்து போர்க்கப்பல்களும் சைன்னியங்களும் சீனுத்துறைகளுக்கு போய்க்கொண்டிருக்கின்றன.

கம்பராமாயணம் பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A., B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக்களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்ருர்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலாநிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத் திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலாநிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

18902

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "**KALANILAYAM**"
11, Vellala Street, Purasawalkum, Madras.

Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An ever-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)